1294

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—8—58

25 நயா பைசா





# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீராசுவ கவி

ஆகஸ்ட் 1958. மலர் 35, இதழ் 8. விளம்பி ஹு. ஆவனி மீ

## விஷய அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| உயர்மட்டப் பேச்சுண்டா? உலக மூன்றும் யுத்தந்தானு? —வி. கே. பார்த்தசாரதி | 1 |
| பாரதப் பூங்கா —வசுமதி ராமசுவாமி | 5 |
| சொல்லட்டுமா! —ஹாஸ்யநடிகர் நாராயணராவ் | 7 |
| கடமை ஏ. ரங்கநாயகி ஸ்ரீநிவாஸன் | 9 |
| காளிதாஸர் கனவு கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 17 |
| தம்பியா? தாரமா? —கே. வி. விஜயலக்ஷ்மி | 19 |
| வந்து திறவாய் மகிழ்ந்து —டி. எஸ். ராஜகோபாலன் | 25 |
| கிழக்கு வெளுத்தது —வை. மு. கோ. | [129-148] |



வை. மு. ஸ்ரீயின்

# தீபஸ்தம்பம்

வை. மு. விஜயலக்ஷ்மி

பல அழகிய படங்களுடன்

தனிப் புத்தகமாக வெளிவந்துவிட்டது.

★ விலை ரூ. 4.

முன்பணம் அனுப்பி தபாற்செலவு இன்றி
பெற்றுக்கொள்ளவும். வி. பி. கிடையாது.

# உயர்மட்டப் பேச்சுண்டா? உலகமூன்றும் யுத்தந்தானா?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்.

---

## தென்னை மரத்துக்குத் தேள் கொட்டினால்?........

'தென்னை மரத்துக்குத் தேள் கொட்டியதாம், பனை மரத்துக்கு நெறி யேறியதாம்'—என்பது போல, மத்திய கிழக்கிற்குக் குளிர் கண்டதும், மேற்கத்திய வல்லரசுகளுக்குச் சுரம் ஏறி விட்டது.

மத்திய கிழக்கில், ஈராக்கில், சுதந்தரக் கலகம் பெரிதாகி, அதிகாரிகள் கொன்று வீழ்த்தப்பட்டு, சுதந்தரக் கொடி பறக்க விடப்பட்டது. இந்தத் தீ, லெபனானிலும், ஜார்டனிலும் பரவி, உள்நாட்டுக் கலகங்களும், எல்லைப்புற அமைதியின்மையும் மலிந்தன. எகிப்திய நாஸர், ஐக்ய அரேபிய ரிபப்ளிக் ஸ்தாபிதஞ் செய்து அதன் ஜனாதிபதியானார். மத்திய கிழக்கில் சமாதானம் நிலவ, ருஷ்யாவுடன் ரகசியப் பேச்சுக்கள் நடத்திவருகிறார். மத்திய கிழக்கு விவகாரங்களில் மேற்கத்திய வல்லரசுகளேதும், எவ்வித முகாந்திரங் கொண்டும் பிரவேசிக்கலாகாதென்றும், ஈராக்கின்மீது எவ்வித எதிர்ப்பாவது ஏற்படுமாகில், அதையே ஐக்ய அரேபிய ரிபப்ளிக்மீது எதிர்ப்பாகக் கருதி, அதற்கான மேல் நடவடிக்கைகளைத் தான் நடத்துவதாகவும் நாஸர் சங்கல்பித்துக் கொண்டு, இந்தியாவிற்குந் தெரிவித்து, உலக சமாதான நடுநிலைமை கெடாது பாதுகாக்க நேருவை வேண்டியுள்ளார். ருஷ்யாவும், சீனாவும், புதிய ஈராக் ரிபப்ளிக்கை ஆதரித்து, நாஸரின் அறிக்கைகளை ஆமோதித்துள்ளன.

மத்திய கிழக்கு இப்படிக் கொந்தளித் திருக்கையில், அமெரிக்கா, திடீரெனத் தனது படைவீரர்களை லெபனானிற்குக் கொண்டுவந்து இறக்கியது. சில நாட்களுக்கெல்லாம் பிரிட்டன், ஜார்டன் அரசன தமது உதவியைக் கோரினதாகச் சொல்லிக் கொண்டு, பிரிட்டிஷ் பாரசூட்டுக்களை ஜார்டனில் கொணர்ந்து இறக்கி வைத்தது. அமெரிக்கப் பிரவேசத்தின் பொழுதே மாஸ்கோ, புகார் செய்தது. பிரிட்டனின் பிரவேசம், 'பிராணபத்தான முடிவு' எனக் கண்டித்து, மேற்கு வல்லரசுகள் உலக சமாதான நடுநிலை போக்கி, மத்திய கிழக்கில் துராக்ருதப் பிரவேசம் செய்வதைத் தான் சும்மா பார்த்துநிற்க முடியாதென ருஷ்யா அறிக்கைவிட்டது. ஐக்ய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் தகுந்த பந்தோபஸ்து நடவடிக்கை எடுக்கும் வரையில் ஈராக் எல்லைப்புறத்தில் பாதுகாப்பு காரணமாகவே தாம் வந்ததாக அமெரிக்கா கூறுகிறது. அரசியல் நோக்கத்துடன் தாம் ஜார்டனில் பிரவேசிக்கவில்லையெனவும், ஈராக்கில் மேற்கத்திய நாடுகளுக்குள்ள எண்ணெ பாத்யதையைப் பாதுகாக்கவே தாம் வந்திருப்பதாகப் பிரிட்டனும் சமாதானம் கூறி இரு வல்லரசுகளும் படைகளைப் பின்வாங்காது முன்னோக்கி நிற்கின்றன.

ஜப்பான், மேல்நாட்டார் பிரவேசத்தைத் தீவிரமாய்க் கண்டித்து' உடனே அவர்கள் வாபீஸ் பெறவேண்டுமென ஐக்ய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு முறையிட்டது. ஸ்வீடனும் இதே மாதிரிக்கே முறையிட்டது. ஆங்கில அமெரிக்கப் பிரவேசம் பற்றி இந்தியாவெங்கும் எதிர்ப்புக் கூட்டங்கள் கூடின. மத்திய கிழக்கு உள்நாட்டு விஷயங்களில், மேற்கத்திய வல்லரசுகள் எக்காரணங் கொண்டும் தலையிடுவது உலக சமாதானம் போக்கி மானிடவர்க்கத்திற்கே அழிவுதேடும் மார்க்கமென நேருஜியும் எல்லா நாடுகளுக்கும் செய்தியனுப்பினர்.

## ஸ்ரீ ராஜாஜியின் புத்திமதி

மத்திய கிழக்குச் சுதந்தரத் தீயில், மத்திய கிழக்கு எண்ணையையே மேற்கத்திய வல்லரசுகள் எடுத்து ஊற்றி உலகம் நடுங்கச் செய்துவரும் இவ் வேளையில், சென்னை அரசியல் வயோதிகர் ராஜாஜி, தமது உபதேச மொழிகளை அறிவித்துள்ளார். இதுவரை 'புலி'-'புலி'-யெனப் பரிகசித்துப் பேசியதுபோக, இன்று, உண்மையிலேயே 'யுத்தப் புலி' வந்தே விட்டதென இவர் எச்சரித்துளார். மேற்கத்திய வல்லரசுகள் மத்திய கிழக்கு உள்நாட்டுக் கலக விஷயத்தில் தலையிட்டது, குடியரசுச் சுதந்தர ஸ்தாபிதத்தைத் தடுத்திடும் தந்திரமேயென்றும், ஆங்கில அமெரிக்கப் படைகள் உடனேயே ஜார்டன், லெபனுனினின்றும் வாபீஸ் பெருவிட்டால் உலகயுத்தம் மூள்வது திண்ணமென்றும் இவர் எச்சரித்ததோடு, இந் நெருக்கடியில், இந்தியா இவ் வல்லரசுகளுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளலாகாதென்றும், இக்கணமே காமன்வெல்த்தினின்றும் விடுபட்டுக் கொண்டு, அமெரிக்காவிடம் பண உதவி கேட்பதையோ எதிர்பார்ப்பதையோ தவிர்க்க வேண்டுமென்றும் நேருவுக்குப் புத்திமதியும் விடுத்துள்ளார். உயர்மட்டப் பேச்செதுவும் இனி நடக்கப் போவதில்லையென இவர் உறுதி சொல்லிவிட்டார்.

## ருஷ்யாவின் ராஜதந்திர வெடிகுண்டு

மத்திய கிழக்கு இப்படிக் கொந்தளித்து நிற்கையில், குருஷேவ் திடீரென எவரும் எதிர்பாராதபடிக்கு வீசியெறிந்த ஓர் அணுகுண்டு வெடிபோன்ற ராஜதந்திர யோசனையானது உலக நாடுகள் ஒவ்வொன்றையும் பிரமிக்கச் செய்ததோடு, ஆங்கில அமெரிக்கர்களை ஸ்தம்பித்து இக்கட்டில் சிக்கித் தவிக்கச் செய்துளது. 22-7-58-ல் ஜினிவாவில், மேற்கத்திய வல்லரசுகள் மூன்றும், ருஷ்யாவுடன், நேருவினெதிரில் மத்திய கிழக்கு விஷயங்கள் சம்பந்தமாக ஓர் உயர்மட்டப் பேச்சு மகாநாடு கூடித் தீர்மானத்திற்கு வரவேண்டு மென்பதுதான் ருஷ்யா 19-7-58-ல் விட்டெறிந்த ராஜதந்திர வெடிகுண்டு.

இத் தீர்மானங்களை ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலுக்குச் சிபார்சுகளாக அனுப்பிவைத்து, ஐ. நா. சபை அராபிய நாடுகளுடன் கலந்து இச்சிபார்சுகளை பரிசீலித்து முடிவுக்கு வரவேண்டுமெனவே குருஷேவ் இந்திய மத்தியஸ்தத்தில் உயர்மட்ட மகாநாடு கோரினர். இந்த ருஷ்ய ராஜதந்திரத்தால் யுத்த

18322

மும்முறமும் சற்று நிதானித்துவிட்டது. யாவரும் சிந்தனையில் ஆழ்ந்ததில் 22-7-58 கடந்தும் எவ்வித முடிவும் வந்தபாடில்லை. இந்திய பிரதமர் யாவரும் ஒப்பிக் கூப்பிடுமிடத்திற்குத் தான் வந்து உலக சமாதான ஸ்தாபித விஷயத்தில் தன்னாலியன்ற உதவி செய்வதாக யாவருக்கும் பதில் தெரிவித்துவிட்டார். ஆனால் மத்திய கிழக்கிலுள்ள ஆங்கில அமெரிக்க பொறுப்பு விஷயங்களில் ஸோவியத் எவ்விதத்திலும் தலையிடலாகாதென மேற்கத்திய மூவல்லரசுகளும் சங்கல்பித்துள்ளன. இந்தியா இவ்விஷயத்தில் மத்தியஸ்தம் செய்வதும் மேற்கு வல்லரசுகளுக்கு இஷ்டமில்லை. ருஷ்யாவின் வேண்டுகோள், வெகு சாதுர்யமானதோர் அரசியல் சூழ்ச்சியென, ஒப்புவதற்கும் மறுப்பதற்குமில்லாது ஆங்கில அமெரிக்கர்கள் தடுமாறி விழித்தனர்.

பெயருக்கும் பேச்சுக்குந்தானே சமாதானக் கழகங்கள்! காரியமும் வீரியமும் கண்ணுக்காகுங் காலத்தில், கழகத் தீர்மானங்களை யார் கௌரவிக்கப் போகிறுர்கள்?


## மேற்கத்திய வல்லரசுகளின் தடுமாற்றம்

ருஷ்யா விடுத்த மகாநாட்டு விஷயமாய் மேற்கத்திய வல்லரசுகள் தனித்தனியாக ஆலோசித்துப் பதில் கொடுத்தன. அவைகளுக்குள்ளேயும் மன ஒற்றுமைக் குறைவுதான். தன்னைக் கலவாது, பிரிட்டனும் அமெரிக்காவும் மத்திய கிழக்கிற்குப் படைகளனுப்பியதைப் பற்றிப் பிரான்சுக்கு மனவருத்தந்தான். ஈராக்கைப்பற்றி எண்ணை விஷயமாகப் பிரிட்டனுக்குக் கவலை. அமெரிக்காவோ, ருஷ்ய கம்யூனிஸ்டு ஆதிக்கம் பரவாது தடுத்து நிற்கும் நோக்கத்துடன் ஈராக்மீது கண் வைத்து, அராபிய நாடுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து ருஷ்யாவுக்கு எதிராக பாக்தாத் ஒப்பந்தம் ஏற்படுத்தியது. இப்படிக்கு இரு வல்லரசும் வெவ்வேறு நோக்கத்துடன் கண் வைத்த ஈராக், இன்று புரட்சியெழுப்பிக் குடியரசாகி மேற்கு வல்லரசு சம்பந்தம் ஒழிக்கப் பார்ப்பதில், பாக்தாத் மேலையார் கைவிட்டுப் போய்விட்டது— பாக்தாத் ஒப்பந்தம் இனி இருந்தென்ன? — இல்லாமற் போயென்ன?—எல்லாம் நாஸர் வசம்: நாஸரும் ருஷ்யா ஆதரவு பெற்றுளார். இந்தியாவும் இதர நடுநிலைமை நாடுகளும் நாஸரை ஆமோதிக்கின்றன. மேற்கு வல்லரசுகள் தமக்குள்ளும் பொறுமி பொறுமி, வெளிச்சொல்ல மாட்டாது, திருடனுக்குத் தேள் கொட்டிய கதையாக ருஷ்யாவின் உயர்மட்ட மகாநாடுக்கு ஏற்ற பதில் அளிக்க விழிக்கிறுர்கள்.

குருஷேவும் 28-7-58-ல் நியூயார்க்கில் கூடலாமாவென்றும், இந்தியாவும், மத்திய கிழக்கு பிரச்சினை சம்பந்தப்பட்ட அரேபிய நாடுகளும் இம் மகாநாட்டிற்கு அழைக்கப்பட வேண்டுமென்றும் சம்மதம் தெரிவிக்கக் கேட்டுள்ளார். இந்தியா வந்தால் வரட்டும், அரேபிய நாடுகளுக்கு எப்படி இடங்கொடுக்கக் கூடுமென ஆங்கில அமெரிக்க யோசனை! ஆகவே 28-7-58-லும் மகாநாடு கூடவில்லை. குவாய் என்ன சிறியதாயினும் மிகப் பெரிய எண்ணை ராஜ்யத்தில், நாஸர் சம்பந்தம் ஏற்படுகிறதெனப் புகார்கூறி, ஆங்கிலப் படைகள் பாதுகாப்பிற்கென்று சுற்றி

வளைத்து வந்துவிட்டன. ஓமானிலும் இதேமாதிரி அமைதி குலைந்து, கலகமும், எண்ணெய் பாதுகாப்பிற்காக மேற்குப் பிரவேசமும் நடந்தேறுகிறது. இதுவேறு குற்றங்கள் நாஸர் நோக்கில்!

எண்ணெயும் சுதந்தரத் தீயுமாகக் கலந்து பொங்கிக் கொந்தளித்துக் குமுறி எரியும் இந்த நிலைமையில் என்றுவது எங்காவது உலக சமாதானம் பேசக்கூடிய உயர்மட்டப் பேச்சு மகாநாடு கூடக்கூடுமா?—ராஜாஜி முன் அறிவித்தது போலக் கூடவே கூடாதா?—உலகப் போர்தானோ?—



ஸ்திரீகளுக்கான-தொழில்-வேலைப் பயிற்சி நிலையம்

மத்திய தொழிலாளர் நல மந்திராலயம் ஸ்திரீகளுக்காக நடத்திவரும் தொழில்துறை வேலைத்துறைப் பயிற்சி நிலையத்தின் பூச்சித்திரத் தையல் பயிற்சி வகுப்பொன்றில் வேலை மும்முரமாக நடைபெற்றுவருவதைப் படத்தில் காணலாம்.

க்ஷேம நல ராஜ்யத்தின் லக்ஷியங்களில், வேலையில்லாதோருக்கு புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தவிர, முழு நேரத்துக்கு வேலையில்லாத பெருவாரியானவர்களுக்கு, முக்கியமாக ஸ்திரீகளுக்கு முழு நேர வேலையளிக்க வகை செய்வதும் அடங்கியுள்ளது. நகரங்களிலும் பட்டணங்களிலும் நிர்ப்பந்த நிலைமையில் உள்ள நடுத்தர பிரிவினர் குடும்பங்களுக்கு, அதிகப்படி வருமானத்துக்கான புதிய வாய்ப்புகள், வாழ்க்கையை வளமுறச் செய்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

# ★ பாரதப் பூங்கா ★

— வசுமதி ராமசுவாமி —

—○●✻●○—

குந்தி சிறந்த விவேகி. ஆயினும் தாய்ப்பாசம் அவளுக்கு இருந்தது. கர்ணனை பிரிந்து வரும்போது அவனிடம் ஒரு வரன் கேட்டாள். "மகனே! துரியோதனன் உப்பைத் தின்ற நீ உள்ளளவும் நினை. உன் தம்பிமார்களுடன் யுத்தம் செய். ஆனால் அவர்களைக் கொன்று விடாதே. விரோதி வீரனை நீ எனக்கு வாக்குக் கொடு" என்றாள்.

கர்ணன் "தாயே! எனக்கு சமதையானவீரன் அர்ஜுனன் தான். மற்றவர்களோடு நான் சண்டை யிட்டாலும் நான் உயிரைப் பறிக்கவில்லை. ஆனால் இந்த யுத்தத்தில் நானாவது, அர்ஜுனனாவது அழியதான் வேண்டும். உனக்குமற்ற ஐந்து பிள்ளைகள் நிச்சியம். அந்த வாக்குத்தான் அளிக்க முடியும்" என்றான்.

குந்தி அறிவு நிறைந்தவள். இயற்கையின் நியதியை உணர்ந்தாள். கால வெள்ளம புரண்டு வரும்போது அவள் எதிர் நீச்சல் போடவில்லை. தாயன்பு பொங்கியது. கர்ணனை பிரிய மனமின்றிப் பிரிந்தாள்.

பாரதப் போர் மும்முரமாக நடந்தது. கர்ணனும், பீமனும் கோர யுத்தம் செய்தார்கள். கர்ணன் குந்திக்கு அளித்த வாக்கிற்காக அடக்கமாகவே போரிட்டான். பீமன் பல தடவைகள் கர்ணனுடைய தேரையும், குதிரையையும், கொடி மரத்தையும் தகர்த்து எறிந்தான். கர்ணன் பீமனைப் பார்த்து "பெருந்தீனிக்காரனே உன்னால் என்னோடு சண்டையிட முடியாது. அர்ஜுனனை வரச்சொல்லு" என்று ஏளனம் செய்தான். பீமன் சீறினான். கர்ணனுடைய குதிரையைக் கொன்றான். கர்ணன் தேரின்றி கீழே இறங்கி யுத்தம் செய்தான். துரியோதனன் உதவிக்குத் தம்பிகளை அனுப்பி அவர்களையும் பீமன் கொன்று குவித்தான். கர்ணன் அன்னைக்கு அளித்த வாக்கு, துரியோதனனிடம் உள்ள நன்றி இரண்டுக்குமிடையே மனம் வருந்திக் கண்ணீர் விட்டான்.

கடைசியில் அர்ஜுனன் கர்ணனுடன் போரிட வந்தான். கர்ணனுடைய ரதச் சக்கரம் மணலில் புதைந்தது. அதை தூக்கும் வரை பொறு அது தான் யுத்ததர்மம் என்றான் கர்ணன். கிருஷ்ணன் தர்மத்தைப்பற்றி நீபேசாதேஎன்றார்.

கர்ணன் கஷ்டப்பட்டு தேர் சக்கரத்தைதூக்கினான் அழுந்தின சக்கரம் எழும்ப வில்லை. கர்ணன் தனக்கு தெய்வ பலம் இல்லை எனபதை தெரிந்து கொண்டான். கடைசியாகத் தன் வித்தைகளைச் பிரயோகம் செய்யப் பார்த்தான். பரசுராமன் சாபத்தால் கற்ற வித்தை ஒன்றும நினைவுக்கு வரவில்லை, அர்ஜுனன எய்த அம்பால் துளைக்கப் பட்டு கர்ணன் கீழே விழுந்தான். ஆனால், உயிர் நீங்கவில்லை.

இன்றைக்கும் யாராவது அதிக தான தர்மங்கள் செய்தால் "கொடையில் கர்ணனைப் போல்" என்று புகழ்ந்து சொல்லுவார்கள். கர்ணன் தர்மம் செய்வதில் பெயர் போனவன். பிறப்பிலேயே இருந்த காது கவசக்குண்டலங்களை தானம் செய்தான். ஒரு சமயம் விடாமல் பதினைந்து தினங்கள்

மழை பெய்ததாம். அப்பொழுது ஒரு ஏழைப் பிராமணன் கர்ணனுடைய அரண்மனைக்கு வந்து தான் குடும்பத்தோடு பட்டினியால் வாடுவதாகச் சொன்னாராம். கர்ணன் உணவுப் பொருள்களை அவருக்கு வழங்கினான். ஆனால் பிராமணன் அதை மறுத்துவிட்டு, "என்னிடமும் தானியங்கள் இருக்கின்றன. அதைச் சமைக்க உலர்ந்த விறகு குச்சி ஒன்றும் கிடைக்கவில்லை. நான் முன்னதாக சேமித்து வைக்கவில்லை. அடைமழையில் அவதிப்படுகிறேன்" என்றார். கர்ணன் உடனே தன் கொலுமண்டபத்திலுள்ள சித்திரிக்கப்பட்ட மரத் தூண்களை வெட்டி பிராமணருக்கு விறகுக்காக அளித்தானாம்.

யுத்தபூமியில் தர்மதேவதை அவன் தலையைக் காத்துக் கொண்டு சுற்றி வருகிறது. இதை அறிந்த மாயக் கண்ணன் தேரை விட்டு கீழே இறங்கி, கர்ணன் அருகில் வந்து கர்ணனை தடவிக்கொடுத்தார். பிறகு "கர்ணா! உன் காலம் குறுகிவிட்டது. இறக்கும் தருவாயில் நல்ல தர்மம் செய்யவேண்டும்" என்றார்.

"கிருஷ்ணா! தர்மம் செய்ய என்னிடம் என்ன இருக்கிறது" என வருந்தினான் கர்ணன்.

கிருஷ்ணன் "நீ இது வரை செய்த தர்மத்தின் பலனை எனக்கு அளித்துவிடு" என்றார். கர்ணன் மலர்ந்த முகத்துடன், "அப்படியே கொடுக்கிறேன். அர்க்கியம் விட தண்ணீர் இல்லையே" என்றான் வருத்தத்துடன்.

கிருஷ்ணபகவான் கூசாமல், "உன் உடலில் பெருகும் ரத்தத்தை அர்க்கியமாக விடு" என்றார். கர்ணன் சந்தோஷமாக புண்ணிய பலனை தானம் செய்தான். அடுத்த நிமிஷம் தர்மதேவதை மறைந்தது. கர்ணன் உயிர் நீங்கியது. அந்த தர்மாத்மா மிகச் சிறந்த தர்மமான புண்ணிய பலனை சிரேஷ்டமான புருஷோத்தமனுக்கு தானம் செய்த பெரும் பாக்கியத்தை அடையவே மாயக் கண்ணனும் கேட்டான். அதிலும் அந்த தத்வமிருக்கிறது.

கர்ணன் மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடைந்தான்.

வாழைமரம் வெகு காலம் இருப்பதில்லை. ஆனால் குறைந்த காலத்தில் மக்களுக்கு அநேக பலனைக் கொடுக்கும். பாரதப்பூங்காவில் கர்ணன் வாழைமரத்தைப் போன்றவன். பிரதிபலன் கேளாமல் தர்மம் செய்து தலைசாய்ந்தவன்.

●

## திகைப்பு

சமயலில் புத்தி செல்லாது
சினிமாவைத்தாவி சிந்தனை ஓட
கணவனின் முகம் களிப்புடன்
தோன்ற

இருவரும் செல்லும் தோற்றம்
சினிமாப்போல் கண்ணில் மின்ன
விரைந்தாள் வீதியைநோக்கி
ஆனால்...!

"அம்மா ஐயாவுக்கு வேலை ஒழியாதாம் இன்று இல்லை என்று சொல்லசொன்னார்." என்ற ஒலி ஒலித்ததும்...?

# ... சொல்லட்டுமா! ...

**ஹாஸ்ய நடிகர் எல். நாராயண ராவ்.**

வழக்கப்படி காலையில் சோம்பல் முறித்தவாறு எழுந்திருந்து என் வேலைகளை துரிதமாக நடத்திக் கொண்டிருந்தேன். இரவு தூக்கத்திலும் கூட அந்த நாடகமே என் கண்ணெதிரில் கூத்தாடிக் கொண்டிருந்தது. விடிந்த பிறகும் என் நெஞ்சில் தோன்றி என்னைத் துள்ள வைத்தது. என் உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் என் திட்டப்படி வெளியே கிளம்பினேன். நேரே கெங்கையாடி முதலியார் இல்லத்திற்கு விரைந்தேன். சின்ன தாராபுரத்திற்கு நாடகக் குழுவை வரவழைத்த ப்ரமுகர் அவர்தான். அவரைச் சந்தித்து 'எனக்கு நாடகங்களில் நடிக்க ரொம்பவும் ஆசையாக இருக்கிறது. நீங்கள்தான் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று என் அவாவை விவரித்தேன்.

கெங்கையாடிமுதலியார் என்னிடம் மிகவும் ப்ரீதியுடையவர். ஊரிலும் செல்வாக்கு மிகுந்தவர். குழுவையும் வரவழைத்தவரல்லவா? நானே எதிர்பாராத விதம் எனக்கு அன்றிரவு நாடகத்திலேயே நடிக்க ஒருவாய்ப்பும் ஏற்படுத்திவிட்டார். முதன் முதலில் என் பகற்கனவை நிறைவேற்றிய நாடகம் "நல்ல தங்காள்" தான். அதில் நான்தான் மூத்த பிள்ளை. ஒத்திகை கூடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டேன். எழுதத் தெரியுமா? அல்லது எழுதியதைத்தான் உணர்ச்சியோடு வேகமாகப் படிக்கத் தெரியுமா? சிறு வயதிலேயே படிப்பு எனக்கு விரோதியாயிற்றே. அவர்கள் எப்படிச் சொல்லிக் கொடுத்தார்களோ அதை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவித்தேன். எனக்குத் தாயாக நடித்தவளின் வசனங்களைக் கேட்டதும் என் மனது 'களக் களக்' என்று பயத்துடன் அடித்துக் கொள்ளத் தொடங்கியது. "மகனே! உங்கள் அனைவரையும் கிணற்றில் தள்ளி விட்டு நானும் சாவதுதான் என் கடைசி முடிவாகிவிட்டது' என்று கூறி கதறினாள். 'ஐயோ! கிணற்றிலா!' என்று மனதிற்குள் அலறினேன். பக்கத்திலிருந்தவர்களும் 'தேவு! உன்னைக் கிணற்றில் தள்ளிக் கொன்றுவிடப் போகிறார்கள்' என்று பயமுறுத்தினர். உள்ளம் உதைத்துக்கொண்டாலும் நாடகத்தில் நல்லபெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கவே என் பாகத்தை நன்றாக நடிக்கத் தீர்மானித்தேன். நடித்துக்கொண்டிருந்தபோது நான் நடுங்கிக் கொண்டிருந்த அந்தக் காட்சியும் வந்தது. கிணற்றில் தூக்கிப் போடும்போது 'ஆ' என்று அலறலாமா? என்று இருந்தது. அலறியும் விட்டேன்.

ஆனால் என்னைப் போட்டது தண்ணீருள்ள கிணற்றிலா இல்லை. அட்டையால் கிணறு போல் தடுத்திருந்த ஒரு இடத்தில் உட்கார வைத்தார்கள். 'பூ இவ்வளவுதானா! இப்படி விழுவதென்றால் எத்தனை கிணற்றில் வேண்டுமானாலும் விழலாமே' என்று எண்ணினேன். முதல் நாடகத்திலேயே

பகவான் எனக்கு அருளியிருந்த நடிக்கும் சக்தியினால் முதல்தரமான பெயர் வாங்கி விட்டேன்.

என் வீட்டு மனிதர்களும் அந்த நாடகத்தைப் பார்த்திருக்கிறார்கள். என்னைப் பார்த்ததும் அவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்? பூசை நிறைய கிடைக்கும் என்று எதிர்பார்த்துத் தயாராயிருந்தேன். அதற்குத் தகுந்தாற்போல் கலாட்டா செய்தார்கள். நான் ஒன்றையுமே காதில்வாங்காதது போல் இருந்து விட்டேன். பிறகு வாயை மூடிக்கொண்டு விட்டார்கள். ஏன்? என்ன என்று ஒருபேச்சு கேட்கவில்லை. 'இந்த தரிதலைப் பிள்ளையை எத்தனை அடக்கினாலும் அது அடங்காது. போன வழியே போய் ஒழியட்டும்' என்று விட்டுவிட்டார்களோ, அல்லது 'பையனுக்குக் கலையார்வம் நிறைய இருக்கிறது. படிப்பில்லாவிட்டாலும் இந்த வழியிலாவது முன்னுக்கு வரட்டும்' என்று நினைத்தார்களோ எதுவென்று தெரியாது. ஒரு தடவை கிணற்றில் விழுந்து, பிழைத்து எழுந்து புனர்ஜென்மம் எடுத்தது முதல் என் எதிர்ப்புகள் குறையத்தொடங்கின.

மறுநாள் காலை. என் வானர சைனயங்கள், என் வெற்றிக்கு வாழ்த்து கூற படையெடுத்தது.

"தேவு! ரொம்ப நல்லா நடிச்சுட்டலே...உன் ஆசை தீர்ந்து விட்டதப்பா."

"அந்த நாடகத்தில் தேவுவைக் கிணற்றில் தூக்கிப் போட்டு கொன்றுவிடுவார்கள் என்று என் அப்பா சொன்னதும் ஒரே நடுக்கமாய்விட்டது."

"உன்னைக் கிணற்றில் தூக்கிப் போட்டும் கூட எப்படியடா நீ பிழைத்தாய்? இனி இம்மாதிரி நாடகங்களில் நடிக்காதே." — இப்படி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறினர். கர்வத்தோடு அவர்கள் மத்தியில் அமர்ந்திருந்தேன்.

மூத்தப் பிள்ளையாக வந்து கிணற்றில் விழுந்ததற்கே அவ்வளவு சந்தோஷமும், கர்வமும் எனக்கு எழுந்ததை நினைத்தால் இப்போது எனக்கே வியப்பாயிருக்கிறது. முதன் முதலில் நடித்த நாடகத்திலேயே சாகவேண்டுமா? ஒரு ராஜபார்ட் கிடைத்திருக்கக் கூடாது? என்று தோன்றியது பிறகு. ஹ-ம் ராஜபார்ட்டாவது, ராக்ஷஸ பார்ட்டாவது. ஏதோ ஒன்று கிடைத்து நாடக மேடைமீது ஏறி எல்லோரும் நம்மைப் பார்க்க வேண்டும், என்ற ஒரு அசட்டு ஆசையில் அப்போது முண்டியடித்துக்கொண்டு நடித்தேன்.

பிறகும் அந்த குழுவினர் நடத்திய சில நாடகங்களில் நடித்தேன். அந்த கோஷ்டியில் முக்யமான பார்ட் எடுத்து நடிப்பவர்களில் தில்லை நாயகம் பிள்ளை என்பவர் ஸ்திரீ பார்டும், சுப்பாநாயுடு, நயனாழ்வார், கரூர் கன்னய்யா முதலியவர்கள் ராஜ பார்டும் போடுவார்கள். ஒத்திகையின் போதும் சரி, நாடகம் நடிக்கும்போதும் சரி. அவர்கள் நடிப்பில் சொக்கிப் போவேன். என்னை மறந்து ரஸிப்பேன். நாமும் என்று இவர்களைப் போல் பெரியவர்களாகி நன்றாக நடித்து பேரும் புகழும் பெறப் போகிறோம் என்று கொட்டாவி விடுவேன்.

(தொடரும்)

# — கடமை —

ஸ்ரீமதி A. ரங்கநாயகி ஸ்ரீநிவாஸன்

★

'டக் டக்' என்று பாதரக்ஷைகள் ஒலிக்க, டாக்டர் கிருஷ்ணன் தனது அறைக்குள் நுழைந்தான். அவனது பரந்த நெற்றியும், கூர்மையான விழிகளும், வாட்டசாட்டமான உடலமைப்பும் அவன் ஒரு உழைப்பாளி, தனது தொழிலில் நல்ல அனுபவம் பெற்றவன் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டின. சாந்தமே பொலிந்த அவனது முகம் சலனமற்றிருந்தாலும், ஏதோ ஒரு விவரிக்க இயலாத துக்க சாகரத்தில் வீழ்ந்து தத்தளிப்பது போல் தோன்றிற்று. அவனுக்கு வயது முப்பது இருந்தாலும், தோற்றம் ஒரு முதியவன் போல் காணப்பட்டது.

அறைக்குச் சென்றவன் நேராக தனது மேஜை அருகில் சென்றான். டாக்டர்கள் அணியும் வெள்ளை நீள அங்கியை அணிந்து, கையில் ஸ்டெதாஸ்கோப்பை எடுத்தவாறே, மேஜைமீதிருந்த மணியை அழுத்தினான். வெளியில் நின்றிருந்த பையன் ஓடிவந்தான். "பாலு! நோயாளிகளை வரச் சொல்" என்று உத்தரவிட்டான். வெளியில் டாக்டரின் வரவுக்காகக் காத்திருந்த நோயாளிகளின் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. 'நான், நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு டாக்டரின் அறைக்கு விரைந்து சென்றார்கள். கிருஷ்ணன் மிகவும் சாந்தமாகவும், பொறுமையாகவும் ஒவ்வொரு நோயாளிகளையும் பரிசோதித்து மருந்துகளை எழுதிக்கொடுத்தான். ஒவ்வோருவரும் தங்களது சீட்டுகளைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

யாவரும் சென்று விட்ட பிறகு மிகவும் சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டான் கிருஷ்ணன். எவ்வளவு நாழிகை அப்படி உட்கார்ந்திருந்தானோ அவனுக்கே தெரியவில்லை. "சார்" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான். எதிரே பாலு தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தான். "என்னடா பாலு?" என்று கேட்டவாறே கண்களை கசக்கி விட்டுக் கொண்டான். "சார்! உங்களைப் பார்க்க ஒரு அம்மாள் ரொம்ப நாழிகையாய் காத்துக் கொண்டிருக்கிறுங்க. நீங்க சோர்வுடன் கண்களை மூடி கொண்டு சிரமபரிகாரம் செய்துகொண்டிருந்தீங்க! உங்களை எழுப்ப மனம் கேக்காமல் அந்த அம்மாளை பிறகு வரச் சொன்னேன். அவங்க கேக்கலீங்க. ரொம்ப அவசரமாம்" என்று தயங்கி தயங்கி பதிலளித்தான்.

"சீ முட்டாள்! வந்தவர்களை உள்ளே அழைத்துவர உன்னை வைத்திருக்கிறேனே தவிர, விரட்டியடிக்க வல்ல! அதிகப்பிரசங்கி! போய் அந்த அம்மாளை அழைத்துவா!" என்று கோபமாக டாக்டர் கூறினதை கேட்டு உண்மையில் பாலு பயந்து விட்டான். தனது மனப்போராட்டத்தின் கலவரத்தில் பையனை அனுவசியமாகக் கோபித்துக்கொண்டு விட்டோமே என்று எண்ணி வெட்கமுற்ற கிருஷ்ணன், பையனைத் தேற்றும் பாவனையில் அவனது முதுகைத் தடவியவாறு, "பாலுபோ! அவங்களை அழைத்துவா, வந்தவர்களுக்கு வைத்தியம் செய்யவல்லவோ என்னை

அனுப்பியிருக்காங்க. சிரமத்தைப் பார்க்கலாமா? என் கடமையிலிருந்து தவறலாமா? போ. இனிமேல் அப்படி செய்யாதே'' என்று இதமாக பேசி அனுப்பினான். பாலுவும் சிறிது மனம் தேறியவனாக வேகமாக வெளியில் சென்றான்.

வரும் நோயாளியை கவனிக்கத் தயாராக நின்ற டாக்டர் ஆள் வரும் ஓசையைக் கேட்டு, "என்னம்மா உடம்பு?'' என்று கேட்டவாறே கையில் ஸ்டதாஸ்கோப்பை எடுத்துக் கொண்டான். ''ஹா! அத்தான், நீங்களா?'' என்று ஆச்சர்யத்தால் கூவும் பெண்மணியைத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். "விஜயா! நீயா?'' என்று மிகவும் வேதனையுடன் ஒலித்த டாக்டரின் குரல் கம்மியது; கண்கள் பொங்கிவரும் நீரை மறைக்கும்பொருட்டு இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. கையில் இருந்த குழாய் நழுவி கீழே விழுந்தது. எவளை மறந்து கண்மறைவாக காலந்தள்ளி வந்தானோ, அவளையே மறுபடியும் சந்திக்க நேர்ந்ததை நினைத்து பெருமூச்செறிந்தான். சிலவினாடிகள் மௌனமான நிலை அடைந்திருந்த அறை சூன்யமாக தோன்றியது. தனது பழைய நினைவுகளையும், சம்பவங்களையும் மூட்டையாகக்கட்டி தனது இதய பாதாளத்தில் எறிந்தவனாக கடமையை நிறைவேற்றும் தோரணையில்; "உங்களுக்கு என்னம்மா உடம்பு?'' என்று அமைதியாகக் கேட்டான். "அத்தான்! என்ன நீங்கள் தாங்கள் என்றமரியாதை? நீங்கள் இன்னும் பழைய அத்தானாகவே இருக்கிறீர்களே! உங்களை இன்று சந்திப்பதாகவே நான் நினைக்கவில்லை. நீங்கள் எங்களையெல்லாம் அடியோடு மறந்துவிட்டீர்களென்று நினைக்கிறேன். இவ்வளவு நாட்கள் நீங்கள் இருக்கும் இடம்தெரியாமல் மிகவும் வேதனைப்பட்டேன். இன்னும் உங்கள் கோபம் தணியவில்லை போலும்!'' என்று கூறிக் கொண்டே விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள் விஜயா.

என்னதான் மனதை கல்லாக்கிக் கொண்டு அவளை மறக்க முயன்றாலும் தோல்வியே அடைந்த கிருஷ்ணன் அவளது நீள் கருவிழிகளிலிருந்து முத்து முத்தாக கண்ணீர் உதிர்வதை கண்டவுடன் துடித்துப்போனான். அவளை அணைத்து தேறுதல்கூற அவனது பலஹீனமான உள்ளம் துடித்தது. ஆனால் பகுத்தறிவு அவ்வாறு செய்ய இடமளிக்கவில்லை. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்ட கிருஷ்ணன், 'விஜயா! நீ கூறியதுபோல் பழைய சம்பவங்கள் என் மனதை விட்டு அகலவே இல்லை. பசுமரத்தாணிபோல் என் உள்ளத்தில் பதிந்துவிட்டது. மறக்க பிரயத்தனப்பட்டுக்கொண்டே இருக்கிறேன். ஆனால் முடியவே இல்லை- ஒன்றுமட்டும் நிச்சயம். உன் அத்தான் கிருஷ்ணன் இறந்து பத்து ஆண்டுகளாகி விட்டன. இன்று பல உயிர்களைக் காக்கும் பொருட்டு டாக்டர் கிருஷ்ணனாகி இதோ உன் எதிரில் நிற்கிறேன். உன்னை மறுபடியும் பார்க்கக் கூடாது என்ற வைராக்யம் இன்று தோற்றுவிட்டது. இது விதியின் விளையாட்டு போலும்! சரி பழைய கதையை இத்துடன் நிறுத்திக்கொள்வோம். உனக்

கு என்ன உடம்பு?'' என்று விரக்தியாக பேசி தனது தொழில் வழியில் இறங்கினன். விஜயா தனது விம்மல்களைக் கஷ்டப்பட்டு அடக்கியவாறு, ''எனக்கு ஒரு கேடுமில்லை- அவருக்குத்தான் கடுமையான ஜுரம். பல ஊர்களைச் சுற்றி பார்த்துக் கொண்டே நேற்று இந்த கோடைக்கானலுக்கு வந்தோம்- வந்தது முதல் ஜுரம். ஊரும் புதிது. இவ்வூரில் மலேரியா ஜுரம் பரவியிருப்பதால், அதற்காக வைத்தியம் செய்ய கிருஷ்ணன் என்ற டாக்டர் வந்திருப்பதாக சிலர் கூறினர்கள். பெயரைக் கேட்டதும் எனக்குப் பழைய சம்பவங்கள்நினைவுக்கு வந்தன. ஒருவேளை அத்தானக இருப்பாரோ என்ற என்னுடைய ஊகம் சரியாகிவிட்டது. அத்தான்! சீக்கிரம் வாருங்கள். நீங்கள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்'' என்ருள் கவலை தோய்ந்த உள்ளத்துடன். கிருஷ்ணன் சிறிது நேரம் அசையாமல் நின்ருன். ''சரி! நீ உன் இருப்பிடத்தைச்சொல்லி விட்டுப் போ! நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன். எனக்கு சிறிது வேலை இருக்கிறது'' என்ருன் வறட்சியான குரலில். விஜயாவால்பேசவோ நிற்கவோ முடியவில்லை. இருப்பிடத்தைக் கூறிவிட்டு, ''அத்தான்! என் குற்றத்திற்காக இப்பொழுது அவருக்கு வைத்தியம் செய்ய தயங்காதீர்கள். எனக்காகவல்ல.டாக்டர் என்ற முறையில் உங்கள் கடமையைச் செய்யத் தவருதீர்கள்'' என்று சொல்லி விட்டு பதிலுக்கும் காத்திராமல் வேகமாக வெளியில் சென்றுவிட்டாள்.

அவள் சென்ற பின்பு பெருமூச்சுடன் நாற்காலியில் சாய்ந்தான் கிருஷ்ணன்- விஜயாவின் வேதனை நிறைந்த முகமும், அவளது சொற்களும் அவன் உள்ளத்தை வெகுவாக புண்படுத்தி விட்டன. என்னதான் பகுத்தறிவு கொண்ட டாக்டராயினும், தன் உணர்ச்சிகளை அவனல் கட்டுப்படுத்தவே முடியவில்லை. 'ஒருகாலத்தில் என்னை வேண்டாம் என்று உதறி தள்ளியவள் இன்று தைரியமாக என்னிடமே வந்து தனது கணவனுக்கு வைத்தியம் செய்யும்படி அழைக்கிருளே' வெட்கங்கெட்ட ஜென்மம்! நான் நினைத்தபடி யாவும் சரியாக அமைந்திருந்தால் இன்று விஜயாவின் ''அவர்'' பட்டத்தை நான் ஏற்று இன்ப வாழ்க்கை நடத்தியிருப்பேன்! ஆனல் என் மனக்கோட்டை ஒரே விநாடியில் தூள் தூளாக உடைந்துவிட்டதே!' என்று பல பல எண்ணமிடலானன். அவன் கண்கள் கலங்கின. அவனது நினைவு திரையில் சிறுவன் கிருஷ்ணனும், சிறுமி விஜயாவுப் காட்சி அளித்தார்கள். நினைவு பத்து ஆண்டுகளுக்குப் பின்னேக்கி சென்றது.

* * *

தஞ்சையில் ஒரே வீட்டில் சிறிய வயது முதல் பூவும் மணமும்போல், நகமும் சதையும் போல் இணைபிரியாமல்சேர்ந்து வளர்ந்தவர்கள் விஜயாவும், கிருஷ்ணனும். விஜயாவின் அத்தையின் பிள்ளையான கிருஷ்ணன்,சிறிய வயதிலேயே பெற்றேர்களை இழந்து, மாமாவின் அரவணைப்பில் வளர்ந்து வந்தான். 'இன்கம்டேக்ஸ் உத்தியோகஸ்தரான கோபாலய்யருக்கு விஜயா ஏக புதல்வி. அவளது செந்தாமரை முகமும் சுருண்ட கருங்குழலும் பார்ப்ப

வரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடும். படிப்பிலும், பாட்டிலும் நல்ல தேறச்சி பெற்றிருந்தாள். பெண்களுக்கேற்ற அடக்கமான சுபாவத்தைக் கொண்டவள். அவளது தாய் ஜானகி, பெரிய செல்வந்தரின் பெண். பிறந்த இடமும், புகுந்த இடமும் பரம்பரை பணக்கார இடம். ஆகையால் அவளுக்கு ஏழை, எளியோரிடம் ஒரு அலக்ஷிய பாவம் தானகவே வளர்ந்து வந்ததில் ஆச்சர்ய மொன்று மில்லை. தனது நாத்தனரின் பிள்ளையும் தற்சமயம் அனுதையாக நிற்கும் கிருஷ்ணன், செல்வந்தர்களான தங்களுடன் தங்கியிருப்பது தங்கள் கௌரவத்திற்குக் குறைவு என்று எண்ணினுள். அவனுடன் தனது செல்வ மகள் சரிசமமாகப் பழகுவது கட்டோடு பிடிக்கவில்லை. சிறிய பாலகளுக இருந்த போது கிருஷ்ணனுக்கு மாமியின் மனபான்மையை அறிந்து கொள்ளும் சக்தியில்லை. ஆகையால், விஜயாவுடன் சகஜமாகப் பழகி அவளது அழகிலும், புத்திசாலித்தனத்திலும் மயங்கி விட்டான். சிறிய வயதில் தோன்றிய அன்பானது வயது ஏற ஏற காதலாக மாறிவிட்டது. விஜயாவின்றி தன் வாழ்வு மலராது என்ற முடிவுக்கு வந்தான். மாமியின் வெறுப்புக்கிடையே இண்டர் பரீக்ஷையை எழுதி முடித்தான். அப்பொழுதுதான் அவனது வாழ்க்கையே மாறிப்போக காரணமாக இருந்த அந்த சம்பவம் நடந்தது. சிறிய சம்பவம்தான். ஆனல் ரோஷக்காரனுனகிருஷ்ணன் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்து விட்டான்.

ஒருநாள் தன்னறையில் உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் படிப்பதில் மூழ்கியிருந்தான். நடுநடுவே விஜயாவின் இன்முகம் அவனது மன கண்முன்பு தோன்றி அவனை படிக்கவிடாமல் தடை செய்து கொண்டிருந்தது. சில நாளாக விஜயா தன்னிடம் கலகலப்பாகப் பேசுவதில்லை, பழகுவதில்லை என்பதை ஜாடையாகக் கவனித்த நாளிலிருந்து அவனது உள்ளம் வேதனையால் தவித்தது. 'என்னவிருப்பினும் அவள் செல்வந்தரின் ஏக புதல்வி. அனுதையான என்னிடத்தில் சகஜமாக பழக இசைவாளா? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல் அவளை அடைய நான் ஏங்குவது எவ்வளவு முட்டாள் தனம்! ஆயினும் விஜயாவின்றி என்னல் வேறு பெண்ணை நினைக்கவும் கூசுகின்றதே! விஜயா என் இன்ப ராணியாக ஆகிவிட்டால்... ஆஹா! எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்?' என்றுஎண்ணியவாறே அமர்ந்திருந்தான். இன்னும் ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு விஜயாவை மறந்து விடும்படியான சூழ்நிலை ஏற்படும் என்பதை அவன் அறிவானு?

உரத்த குரலில் மாமா தன்னைக் கூப்பிடுவதை அறிந்த கிருஷ்ணன் புத்தகத்தை மேஜைமீது வைத்து விட்டு அவரது அறைக்கு வேகமாகச் சென்ருன். கூடத்தை தாண்டிச் செல்லுகையில் தனக்கெதிராக விஜயா வேகமாக வருவதை அறிந்ததும் ஆர்வத்துடன் அவளை நோக்கினுன். அவளது முகம் சிவந்து, கண்களில் நீர் நிறைந்திருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டு அவளி

டம் பேச வாய் திறக்கும் முன் விஜயா அவனை பரிதாபகரமாகப் பார்த்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டாள். கிருஷ்ணனின் பாதங்கள் தாமாகவே தரையில் பதிந்து விட்டன. மனம் விவரிக்க இயலாத வேதனையால் தத்தளித்தது. தன்னை மறந்த நிலையில் நின்றுவிட்டான். மறுபடியும் மாமா உரக்கக் கூப்பிடவே சுய உணர்வை பெற்றவனாக அவரது அறைக்குள் நுழைந்தான்.

"என்னடா! இவ்வளவு நேரமாகக் கூப்பிடுகிறேன். ஆளையே காணோம்! சரி, இப்படி உட்கார்'' என்று கடுகடுத்த முகத்தோடு வரவேற்றார் மாமா. அவரது நாற்காலிக்குப் பின்னால் ஜானகியும் நின்றிருந்தாள். அறையில் பயங்கரமான அமைதி நிறைந்திருந்தது.' அச்சத்துடனும், பயத்துடனும் ஒரு நாற்காலியில் அமர்ந்தான். மாமா தொண்டையை சரிபடுத்திக்கொண்டு கிருஷ்ணனை நோக்கி, "கிருஷ்ணா! நான் சொல்வதை கவனமாகக் கேட்டுக்கொள். கேட்டு அதன்படி நடந்தால் உனக்கு நன்மையுண்டாகும். அது கேட்காமல் உன் இஷ்டப்படி நடப்பதாக இருந்தால் உன் ஜோலிக்கே இனி நான்வரமாட்டேன். தாய், தந்தையற்ற உன்னை இதுவரையில் வளர்த்து பெரியவனாக்கி விட்டேன். இனி நீ ஒரு உத்தியோகத்தில் அமர்ந்து குடியும் குடித்தனமுமாக சந்தோஷமாக இருந்தால் எனக்குத் திருப்தியாக இருக்கும். என் நண்பர் ஒருவர் தமது பெண்ணுக்கு ஏற்ற வரனாகப் பார்த்து சொல்லும்படியும், அவன் தன்னுடனேயே இருக்க வேண்டுமென்றும், மேல் படிப்புக்கு உதவி செய்வதாகவும் எழுதியிருக்கிறார். உன்னை அவருக்கு மிகவும் பிடித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த இடம் சரியாக அமைந்துவிட்டால் உனக்கு நல்ல அதிர்ஷ்டம். உன் இஷ்டப்படி படிக்கலாம்; நல்ல உத்தியோகமும்கிடைக்கும். என்ன சொல்லுகிறாய்?'' என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தார். கிருஷ்ணனின் தலை கிறுகிறுத்தது. அண்ட சராசரங்களும் ஒரே சுழலாகச் சுற்றுவது போல் தோன்றியது. 'என்ன பயங்கரமான சமாசாரம்! என் இதயராணி விஜயா எனக்குக் கிடைக்கமாட்டாளா? என் ஆசையெல்லாம் வெறும் கனவுதானா? வேறு பெண்ணை மணந்து இல்லறம் நடத்துவதா? முடியாது; முடியவே முடியாது. ஐயோ! என்னால் வேதனை தாங்க முடியவில்லையே! என்ன அவல நிலை! அனாதை, மேலும் ஏழை! விஜயா எனக்கு எட்டாத கனி என்று தெரிந்திருந்தாலும் அவளை உயிரினும் மேலாக நேசித்து வந்தேனே! இனி நான் என்ன செய்வது?' என்று பல பல எண்ணி தத்தளித்தவனாக கற்சிலையால் அமர்ந்திருந்தான். "என்னடா யோசனை பலமாக இருக்கிறது. யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று சற்று கோபமாகக்கேட்டார் மாமா. இனியும் பேசாமலிருந்தால் மாமாவின் கோபம் உச்சநிலையை அடைந்து விடும் என்று உணர்ந்த கிருஷ்ணன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "மாமா! இப்பொழுது கல்யாணத்திற்கு என்ன அவசரம்? படித்து உத்தியோகத்தில் அமர்ந்த பிறகு செய்து கொள்கிறேன்'' என்று மெல்லஉரைத்தான். மாமா சீறி எழுந்தார்.

"என்ன இஷ்டமில்லையா? உன்னை இவ்வளவு தூரம் படிக்க வைத்ததே அதிகம். இனி என்னால் உனக்காக ஒரு செப்பு காசுகூட செலவிட முடியாது. என் இஷ்டப்படி நடந்தால் இங்கிரு. இல்லையேல்..." மேலே சொல்ல சிறிது தயங்கினார்.

"நான் சொல்ல வில்லையா? செய்வதற்குத்தான் நாங்கள் மனிதர்கள். சொல்வதற்கு நாம் யார்? இன்னும் துரையை படிக்கவைத்து, விஜயாவை தாரை வார்த்துத் தருவோம் என்று பகற்கனவு காண்கிறான் போலும். அப்படி ஏதாவது அசட்டு யோசனை இருந்தால் அதை மறந்துவிட சொல்லுங்கள்" என்று மடமட வென்று கூறி வெளியில் சென்று விட்டாள் ஜானகி. "அசட்டுபிள்ளை வரும் ஸ்ரீதேவியை உதைத்து தள்ளாதே. நன்றாக யோசனை செய்து பதில்சொல்லு" என்று கூறிவிட்டு மனைவியை பின் தொடர்ந்தார் மாமா.

கிருஷ்ணனின் உள்ளம் ஆயிரமாயிரம் ஈட்டிகளால் குத்துவது போன்ற வேதனைப் பட்டது. எப்படி தன் அறைக்கு வந்தானோ அவனுக்கே தெரியாது. விஜயாவின் கண்ணீருக்குக் காரணம் இப்பொழுதல்லவா புரிகிறது! அவளுக்கும் என்மீது அன்பு இருக்கிறது என்பது நிச்சயம். அப்படியிருந்தும் எனக்கு ஏன் இந்த சோதனை? விஜயா தன் பெற்றோர்களிடம் தன் எண்ணத்தை ஏன் சொல்லி என்னை மணக்கக் கூடாது? பெண்கள் சாதிக்காததும் ஒன்று உண்டா? விஜயா பாசாங்குக்காரி! இந்த ஏற்பாட்டிற்கு அவளும் உடந்தையாக இருப்பாள். பசப்புக்காரி! இவளும் வேண்டாம், இவள் பெற்றோர்களின் பணமும் வேண்டாம். நான் ஏன் இவர்களுக்குப் பயப்பட வேண்டும்? இந்த பரந்த உலகில் தனித்து வாழ எனக்கும் சுதந்திரம் உண்டு" என்று பல வாறான யோசனைகளை செய்யலானான்.

மறுநாள் கிருஷ்ணனின் அறை காலியாக இருந்தது. வீட்டை விட்டு வெளியேறும் வாலிபர்கள் எழுதும்பாணியில் மாமாவுக்கு அவன் எழுதி வைத்துவிட்டு சென்ற கடிதம் கிடைத்தது. மாமியின் 'நன்றி கெட்டவன். துரோகி' போன்ற வசைமொழிகள் அவனுக்குக் கிடைத்தன. ஆனால் தனது வாழ்வின் எதிர்காலத்தை நோக்கி சென்னை சென்று கொண்டிருந்த கிருஷ்ணனின் செவிகளுக்கு அவைகள் எட்டாமல் தப்பின.

அவனது பிரிவால் விஜயா மிகவும் பாதிக்கப் பட்டாள். தன்னை சரியாகப்புரிந்துகொள்ளாமல் தன்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் அத்தான் வெளியேறி விட்டாரே என்று ஏங்கி ஏங்கி கண்ணீர் உதிர்த்தாள். பிரயோஜனம்?

பத்து ஆண்டுகள் உருண்டோடின. தனது உழைப்பாலும், புத்திசாலித் தனத்தாலும் உபகாரச் சம்பளம் பெற்றுத் தன் திறமையினால் டாக்டரானான். தனது மாமா, மாமி, விஜயாவின் நினைவுகளை தன் இதயத்திலிருந்து பிடுங்கி எறிந்துவிட்டான். ஆனால் விஜயாவின் மேல் கொண்டிருந்த கரைகாணாத காதலை மட்டும் அவனால் மறக்கவே முடியவில்லை, வேறு பெண்ணை மணந்து இல்லறம் புக அவனது தூய உள்ளம் இடம் தர

வில்லை. 'மணம் செய்துகொள்' என்று வற்புறுத்தவோ யாருமில்லை. ஆகையால் டாக்டர் தொழிலில் புகுந்து கடமை என்ற ஊன்றுகோலைக் கொண்டு தன் வாழ்க்கைப் படகை நடத்திவந்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்பாராது மறுபடியும் விஜயா தன் முன் தோன்றி சித்திரவதை செய்வதை எண்ணி பரிதவித்தான். இப்பொழுது அவள் வேறு ஒருவனின் மனைவி! மனதில் நினைக்கவும் முடியாத கனியாகி விட்டாள்.

"என்னை மணக்க இசையாது வேறு ஒருவனை மணந்து ஆனந்தமாக வாழ்க்கைநடத்தி வருகிறாள். அவள் கணவனுக்கு நான் வைத்தியம்செய்ய வேண்டும்! விந்தை தான்! அவன் செத்தால் சாகட்டும்! பழிக்குப் பழி" கிருஷ்ணனின் நொந்த உள்ளம் எண்ணியது.

ஆனால் மனசாக்ஷி மறுத்துக் கூறியது. 'சே! நீயும் ஒரு மனிதனா? நீ ஒரு டாக்டர்! நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வது உன் கடமை! இந்த கடமைப் பாதையில் தோன்றியிருக்கும் உறவு என்னும் முள்ளை பிடுங்கி எறிந்துவிடு! சீக்கிரம் போய் அவனைப் பார்! தாமதிக்காதே"

"போகமாட்டேன்! என் வாழ்வைப் பாழாக்கிய அவளது வாழ்வும் பாழாகட்டும்! என்ன திமிர்பிடித்தவள்! அவள் பணமே அவளை காக்கட்டும்"

"முட்டாள்தனமாகப் பிதற்றாதே! யார் வாழ்வை யார் பாழாக்குவது! ஒருபெண்ணின் வாழ்வை கெடுப்பதற்குத் தானா நீ படித்துப் பட்டம் பெற்றாய்? நீ உண்மையாக விஜயாவை நேசிப்பதாக இருந்தால் அவள் வாழ்வை பாழ்படுத்தாது உடனே சென்று உதவி செய்."

'என் வாழ்வின் ஒளியை அணைத்து என்னை இருட்டில் பரிதவிக்க விட்டுவிட்ட அந்த நயவஞ்சகிக்காக நான் வைத்தியம் செய்யவேண்டும்?'

'ஆம்! நீ டாக்டர்! எல்லோருக்கும் வைத்தியம் செய்ய கடமைப் பட்டவன்! கடமையை மறந்து ஆத்திரத்தில் உளராதே! போ.'

கிருஷ்ணனின் தலை வெடித்துவிடும் போல் வலித்தது. மனப் போராட்டம் அவனை உலுக்கி இம்சை செய்தது. கடைசியில்கடமை வென்றது. உறவு முறையை அறவே மறந்தவனாக நோயாளி என்னும் முறையில் விஜயாவின் கணவனைப் பார்க்கச் சென்றான்.

தங்கியிருந்த இடத்திற்குக் காரிலிருந்து வந்திறங்கிய கிருஷ்ணனை இன்முகத்துடன் வரவேற்றாள் விஜயா. அவள் முகத்தைப் பார்த்தால் மறுபடியும் தடுமாற்றம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தவனாக, அவளைப் பாராமல் நோயாளியிடம் வேகமாகச் சென்றான். நோயாளியைக் கண்டதும் ஆச்சர்யத்தால் "ராமுவா?" என்று கத்திவிட்டான். ராமு கிருஷ்ணனின் பள்ளித் தோழன், நண்பனை அன்புடன்வரவேற்ற ராமு, "அட கிட்டுவா! டாக்டராகமாறி எனக்கே வைத்தியம்

செய்ய வந்து விட்டாயா?" என்றான் சிரித்துக்கொண்டே' நண்பர்கள் பலபல பேசினார்கள். கிருஷ்ணன் ராமுவுக்குத் தேவையான மருந்துகளை கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு கிளம்பி விட்டான்.

அவனது பின்னால் சென்ற விஜயா, "அத்தான்! உங்கள் வாழ்வை நானும், என் பெற்றோர்களும் பாழக்கி விட்டோம். அதை பொருட் படுத்தாது இன்று நீங்கள் எனக்கு உதவி செய்தது உங்கள் பெருந்தன்மையை காட்டுகிறது. அத்தான்! பெற்றோர்களுக்கு ஏக புதல்வியாகபிறந்த நான் அவர்கள் சொற்படி கேட்கக் கடமை பட்டேன். அதற்கேற்ப மணம் செய்துகொண்டேன். இன்று நானும் உங்களைப்போல் பெற்றோர்களை இழந்து விட்டேன். அவர், என் கணவர்தான் இனி எனக்குச் சகலமும்! அத்தான் நீங்கள் இந்த மாதிரி மணம் செய்து கொள்ளாமல் வாழ்க்கை நடத்துவதைப் பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எங்கள் மீதுள்ள கோபத்தால் உங்கள் வாழ்வை பாழாக்கிக் கொள்ளாதீர்கள்" என்று மெஷின்போல் கூறினாள்.

கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். மறந்திருந்த அவனது கோபம் பொங்கி எழுந்தது. "விஜயா! கடமை என்ற மனப்பான்மையில் இங்கு வந்தேனே தவிர மனிதனின் பணத்திற்கும், பதவிக்காகவல்ல! என் சொந்த வாழ்க்கையைப் பற்றி ஒருவரும் எனக்கு யோசனை கூறவேண்டாம். என் வாழ்க்கையை வகுத்துக் கொள்ள எனக்கு சுதந்திரமுண்டு! நீ உன் பெற்றோர்கள் சொற்படி மணம் செய்துக்கொண்டு உன் கடமையை நிறைவேற்றி ஆனந்தமாக இருக்கிறாய்! அதுவே எனக்கும் சந்தோஷமாக இருக்கிறது. என் கடமை நோயாளிகளின் சேவை செய்வதேயாகும்! மண வாழ்வு எனக்கு மறுபிறவியில் தான். விஜயாவிற்கு அளித்த உள்ளத்தில் இனியாருக்கும் இடமில்லை. உன்மீது எனக்குச் சிறிதும் கோபமில்லை. வாழ்வில் அவரவர்களின் கடமையை செய்வதே முறையாகும். வீணாகக் கலங்காதே" என்று கூறிக் கொண்டே, எதிரில் ஓடிவந்த விஜயாவின் ஐந்துவயது செல்வனையும் பாராமல் காரில் அமர்ந்து வேகமாக ஓட்டிச் சென்றான் அந்த டாக்டர். அவன் உள்ளம் புயலுக்குப் பின் தோன்றும் அமைதியை அடைந்திருந்தது.

பொங்கிவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே மைந்தனை வாரியணைத்துக்கொண்டு கணவனிடம் சென்றாள் விஜயா.

❋

---

## சுவைப் பாளி.

**பையன்:-** ஏன்பாட்டி மூட்டை இன்னுமா கட்டலே! பெண்ணு பிள்ளைகூட கிளம்பியாச்சே?

**பாட்டி:-** எங்கேடா? க்ரஹப்ரவேசத்திற்கா?

**பையன்:-** அடாடா...சினிமா ப்ரவேசம் போய் ராத்திரி மைலிலே ஹனிமூன் போறா... கிளம்பு வீட்டிற்கு போலாம்.

**பாட்டி :-** நன்னாதான் இருக்கு நம்மே நம்பி செய்தசமயலே யார்டா சாப்பிடுவா......அன்ன ப்ரவேஸத்தை பார்த்திண்டு நாமும் கிளம்பிடலாம்.

# காளிதாசர் கனவு.

## 11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பூராபபாஸே விபணிஸ்த பஹ்யா
ஸர்வாங்க நத்தா பரணேவநாரீ ||

ஒருநாள் சரயூ நதியில் குசன் ஸ்னனஞ் செய்கையில் அவனுக்கு இராமர் அளித்த ஜைத்ரம் என்ற ஆபரணம் தண்ணீரில் விழுந்துவிட்டது. தேடியும் அது கிடைக்கவில்லை. அதைக் குமுதன் என்ற நாகலோக அரசன் அபகரித்திருக்கவேண்டும் என்று தீர்மானஞ்செய்து அவன்மேல் கருடாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்யக் கையில் வில்லேந்தி அம்பைத் தொடுத்தான். உடனே குமுதன் ஓடிவந்து "அந்த ஆபரணத்தை என் தங்கை குமுதவதி எடுத்தாள். அதை ஏற்றுக்கொண்டு அவளையும் திருமணஞ் செய்துகொண்டு அரசியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான், குசனும் மகிழ்ந்து அவளை மணஞ்செய்து கொண்டான். அவர்களுக்கு அதிதி என்ற மகன் பிறந்தான். சில காலத்திற்குப் பிறகு இந்திரனுக்கு உதவியாக போர்புரிந்த பொழுது குசன் துர்ஜயன் என்ற அசுரனைக் கொன்று அதே போரில் தன்உயிரையும் இழந்தான். குமுதிவதியும் உடன்கட்டையேறி சுவர்க்கஞ் சென்றாள்.

### அதிதி முதலிய அரசர்கள் சரித்திரம்

அதிதிக்கு முடிசூட்டியபொழுது சிறையில் இருந்தவர்கள் எல்லோருக்கும் விடுதலை யளிக்கப்பட்டது. கூண்டிலிருந்த பறவைகள்கூட விடுவிக்கப்பட்டன. அதிதி வெகுகால மாட்சிசெய்து பரமபதமடைந்தான். அவனுடைய மகன் நிஷதன். அவனுக்குப் பின் புண்டரீகன், க்ஷேமதன்வா, தேவரனீகன், அஹீனகு, பாரியாத்ரன், சீலன், உன்னபன், வஜ்ரநாபன், சங்கணன், வ்யுஷிதாச்வன், விச்வசகன், ஹிரண்ய நாபன், கௌஸல்யன், பிரஹ்மிஷ்ணன், புத்திரன், புஷ்யன், சுதர்சனன் என்ற அரசர்கள் ஆண்டார்கள்.

### அக்கினி வர்ணன் சரித்திரம்.

பிறகு சுதர்சனன் மகன் அக்கினி வர்ணனுக்கு முடிசூடப்பட்டது. அவன் பெண்ணாசை பிடித்து நெறிதவறிக் காமத்திலாழ்ந்தான். பாட்டிலும் கூத்திலும் பொழுதை வீணாக்கினன். கடமையையும் மறந்தான். அவன் க்ஷயரோகத்தால் இறந்தான், அவனுடைய இராணி அப்பொழுது கர்ப்பமாக இருந்ததால் அவளே மந்திரிகளுதவியால் சிங்காதனமேறி அரசாட்சி செய்தாள்!'

"ராக்ஞீ ராஜ்யம் விதிவததிசத்
பர்துரவ்யா ஹதாத்மா!"

பிறகு காளிதாஸர் கூறினர்: "குமாரதாஸா! ஏன் நான் இப்படி பாரததேச அரசாட்சி வர்ணனையை தபோவனத்திலும் தவத்திலும் வைராக்யத்திலும் தர்மத்திலும் தொடங்கி போகத்தினுலும் காமத்தினுலும் முடித்தேன் என்று உனக்கு வியப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று எனக்குத் தெரியும். ராமராஜ்யம் போன்ற விக்கிரமாதித்ய ராஜ்யத்தில் பாரததேசம் வாழ்ந்திருந்தும் வெகு காலம் நம்முடைய நாடு அதர்மத்தையும் சுதந்திரத்தையும் பெருமையையும் இழந்துவிடும் என்ற அச்சம் என் மனதில புகைந்து கொண்டேயிருக்கின்றது. இப்போதே தர்மத்தைப் புறக்கணித்துக் கடவுளை மறந்து பொருள்வெறியும் இன்பவெறியும் ஏற்பட்டு கர்வவிஷந் தலைக்கேறும் நிலையின் அடையாளங்கள் என் அகக் கண்முன் தோன்றுகின்றன. கோபூஜை நடந்த நாட்டில் கோவதம் ஏற்படுமோ என்று நான், அச்சப்படுகின்றேன். தவசிகளைக் கொண்டாடிய நாட்டில் தனிகர்களை மட்டும் கொண்டாடுங்காலம் வருமென்று எனக்கு நடுக்கமேற்பட்டிருக்கின்றது. வருங்காலத்தில் ஆண்மக்களைவிட பெண்மக்களே தர்மத்தை பாதுகாப்பார்கள் என்று என் எண்ணம். தேசபக்தி, தெய்வபக்தி, சாஸ்திர பக்தி, குருபக்தி, தர்மபக்தி இருந்தால் இந்த பாரதநாடு மறுபடியும் எல்லா நாடுகளுக்குந் தலைநாடாக விளங்கும். வண்டியின் சக்கிரம்போல் மேலிருந்தவர்கள் கீழே போகலாம் கீழே சென்றவர்கள் மேலே போகலாம் என்று நான் "மேக சந்தேச"த்தில் கூறியிருப்பதை மனப்பாடமாக வைத்துக்கொள்"

நீனசர் கச்சத் யுபரிச
தசாம் சக்ர நேமித்ரமேண |

பிறகு, காளிதாசர் தன்னுடைய நூல்களில் ரத்தினம் போன்ற சாகுந்தல நாடகத்தைப்பற்றிக் கூறத்தொடங்கினர்:

"குமாரதாஸா! என்னுடைய அபிஞ்ஞான சாகுந்தலம் என்ற நாடகத்தில் என் கற்பனை சக்தியைப் புது முறையாகப் பூர்த்திசெய்து சிங்கார ஹாஸ்ய கருணை சாந்தி அற்புத வீர ரசங்களை மனதைக் கவரும்படி வர்ணித்து நம்முடைய நாட்டின் சிறப்பையும் நாகரீகங்களையும் நன்குணர்த்தி என்னுடைய காவ்ய உலகத்தை நிர்மாணஞ் செய்யும் மந்திரக்கோலை கீழே வைத்துவிட்டு தேவியை என்னை அழைத்துச் சென்று சந்திர கலாதேவியுடன் சேர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உச்சி நிலையை யடைந்திருப்பதை நீ கண்டுகளித்துப் பிரசாரஞ் செய்ய வேண்டும். இதுதான் என் முடிவான வேண்டுகோள்" என்றுர்.

## சகுந்தலை தர்சனம்

ஒரு நாள் சந்திர வம்ச அரசனை துஷ்யந்தன் கானகத்திற் புகுந்து துஷ்ட மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தன் தேரை வேகமாகச் செலுத்தியபொழுது ஒரு மான்குட்டி அவன் முன் எதிர்ப்பட்டது. அது மிகவும் பயந்து வெருண்டு வெகு வேகமாகப் பாய்ந்து ஓடியும், அரசனுடைய தேரில் மிக விரைவான குதிரைகள் பூட்டப்பட்டிருந்ததால் அந்த ரதம் அதிவேகமாகவே அந்த மானைப் பின்தொடர்ந்தது.

(தொடரும்)

# தம்பியா? தாரமா?

— கே. வி. விஜயலக்ஷ்மி —

"அன்புள்ள அத்தானுக்கு அநேக அஞ்சலிகள். க்ஷேமம்.

நான் எத்தனை நாள் இப்படி எவ்வளவு கடிதங்கள் எழுதிக் கொண்டிருப்பது? ஏன் இப்படி என்னை சித்திரவதை செய்கிறீர்கள். ஆசைக்கென்று பிறந்தகம் வந்து ஒரு மாதத்திற்கு இரண்டு மாதமாக இருந்தாகிவிட்டது. இனி ஒரு க்ஷணமும் இருக்க மாட்டேன். கூடிய சிக்கிரம் நான் வந்து விடுவேன். ஆனால் முன்பு நாம் வசித்த வீடு—இப்போது உங்கள் அருமைத் தம்பியும், நீங்களும் இருந்துவரும் வீட்டிற்கு ஒருகாலும் வரமாட்டேன். நான் அப்படி அந்த வீட்டிற்கு வரவேண்டுமானால் தங்களது திருத் தம்பியை என் கடிதம் கண்டவுடன் மறுப் பேச்சின்றி வெளியேற்றுங்கள்.

நான் இதே விஷயத்தைப் பற்றி பல கடிதங்கள் எழுதி எழுதி சலித்துவிட்டேன். ஆனால் ஏற்பட்ட சலிப்புக்கு பலனைத்தான் காணவில்லை. நான் எழுதும் பல கடிதங்களுக்கு பதிலாக தங்களிடமிருந்து வரும் எந்த ஒரு கடிதத்திலும் நான் கேட்ட கேள்விகளுக்கு விடைகளைக் காண முடிவதில்லை. ஏன் இந்த மழுப்பல்? தம்பியைப் பிரிய மனது வரவில்லையா? அல்லது ஊரார் வாயை அடக்க நடிக்கும் நடிப்பா? இத்தனை நாள் கேட்காத ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறேன். உங்களுக்கு 'தம்பி வேண்டுமா? தாரம் முக்கியமா?' என்பதை ஒரே வரியில் அடுத்த கடிதத்தில் எழுதிவிடுங்கள். ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்துவிடும். இனி மேலும் என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யாது இருக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்.

'புது வீடு பார்த்துவிட்டேன். அந்த அழகான வீட்டில் குடியேற க்ரகலக்ஷ்மி நீ வந்து சேர் உடனே' என்று நீங்கள் கூடிய விரைவில் எழுதப் போகும் கடிதத்தை கனவில் கண்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறேன். அது வும் நினைவாகும் நாள் என்றோ?

தங்களை என்றுமே மறவாத

உங்கள் ஆருயிர் மனைவி,

பாலா"

கோபுவின் தலை சுழன்றது. பாலாவின் கடிதம் அவனைப் பாதாளத்தில் சொருகுவது போலிருந்தது. கடிதத்தை மேஜைமீது அலுப்போடு வீசியெறிந்தான். காற்று சுழலும் வேகத்தில் உறை ஒருபுறம் கடிதம் ஒருபுறம் பறந்து வீழ்ந்தன. அவன் சிந்தனை கட்டுக்கடங்காது புயற்காற்றில் அகப்பட்ட மரம்போல் தலைவிரித்தாடத் தொடங்கியது. 'தம்பி வேண்டுமா? தாரம் முக்யமா?' என்று அவள் கேட்டிருந்த ஒரு வார்த்தைமட்டும் அவன் நெஞ்சை பிழிந்தெடுத்தது. ஏன் பாலாவிற்கு தம்பிமேல் இப்படி ஒரு வெறுப்பு? என்ன காரணம். அவன் ஏதாவது தவருக நடந்து கொண்டிருப்

பானே? என்னிடம் முன்பே சொல்லியிருக்கக் கூடாது. ஊருக்குப் போகும்போது பாலாவின் மனதில் இப்படி ஒரு எண்ணம் இருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லையே. அல்லது பிறந்தகத்தில் அங்கு யாராவது கலைத்திருப்பார்களோ? எப்படியிருந்தாலும் அவள் பிடிவாதம் என்னவோ இனி மாருது.

தாய் தந்தையற்ற—என்னைத் தவிர கனிவுடன் நோக்க வேறு மனிதர் இல்லாத—என்னையே நம்பியிருக்கும் தம்பி பாபுவையா, தம்பி வேண்டுமா என்று கேட்டிருக்கிருள். பாலாவிற்காக அவனை வீட்டைவிட்டு விரட்டுவதா? ஐயோ கொடும் செயல். ஹூம்...பாலாவிற்கு மட்டும் யார் இருக்கிருர்கள். என்னையே தெய்வமாகக் கருதி, பெற்ற தந்தையரிடம் கூட இல்லாத அளவற்ற பாசத்தை என்மீது பொழிந்து, தன்னையே எனக்கு அர்ப்பணித்திருக்கும் பாலாவின் மனதை நோக வைப்பதா? காரணமில்லாமல் அவள் இப்படியெல்லாம் எழுதமாட்டாள்'—இப்படி அவன் எண்ணச் சுடர் எரிந்துகொண்டே போயிற்று.

தம்பியின் பாசமும், மனைவியின் ஆசையும் சேர்ந்து கொண்டு அவனை இருபுறமும் ஆட்டத் தொடங்கியது. பாக்கு வெட்டியின் மத்தியில் அகப்பட்ட வஸ்துவாய் துடிக்கலானுன்.

"கோபு, நேரமாகவில்லை யாப்பா ஆபீஸிற்கு. ஏன் உட்கார்ந்துவிட்டாய்?'' என்ற குரல் அவனைத் தட்டி எழுப்பியது. அவன் தலையை பலவந்தமாகத் திருப்பினுன். பழைய காலம் முதல் அவர்கள் வீட்டிலேயே வேலை செய்துவரும் சமையல்காரி சுப்பு இன்முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"ம்...போகவேண்டும் சுப்பு... எனக்கு தலையை பலமாக வலிக்கிறது. ஒரு ரிக்ஷா அழைத்து வா'' என்றுன்.

"தலையை வலிக்கிறதா? ஏம்பா! மருந்து ஏதாவது சாப்பிட்டாயா? மத்தியானம் தம்பி கூட வீட்டிலிருக்கும். அவன் சிநேகிதர்களுக்கு இன்று விருந்தாயிற்றே.''

சுப்புவின் வார்த்தை எதுவும் அவன் காதில் ஏறவில்லை. "சுப்பு! நீபோய் ரிக்ஷா அழைத்துவா'' என்று உறுமினுன். ரிக்ஷாவில் ஆபீஸிற்கு கிளம்பிச் சென்று விட்டான். வேலை ஓடினுல்தானே? மனது ஒரு நிலையில் நில்லாது தத்தளித்தது. பாதி நாளை எப்படியோ கழித்து விட்டு, பிறகு ரஜா எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான். எங்கே? வீட்டிற்கல்ல. வீடு தேடும் படலத்திற்குத்தான். சாப்பாடு, தண்ணீர் பற்றிய கவலைகூட யில்லாது அவன் தெருத்தெருவாகத் திரிந்து கொண்டிருந்தான். உள்ளத்துள் விரிந்திருக்கும் ஊக்கமும், அவன் உடல் சோர்வைக்கூட பொருட் படுத்த வைக்கவில்லை. தன் மனைவியின் மனதை குளிரவைக்க வேண்டுமே, என்று அவன் மனது அலைந்தது.

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற சொல்லுக்கேற்ப கோபுவின் கண்களில்

ஒரு வீடு தென்பட்டு, கையில் சிக்கியும்விட்டது. இரண்டு நாட்கள் சுற்றியதில் கைமேல் எதிர்பார்த்த பலன் கிடைத்து விட்டதைப்பற்றி அவனுக்குக் குதூகலம். தம்பி காரியால யத்திற்குப் போயிக்கும் நேரங் களில் கொஞ்சம் கொஞ்சமாக தன் சாமான்களை இடமாற்றம் செய்து கொண்டிருந்தான். தம்பியிடம் சொல்லியும் கொள் ளாமல் வேறு ஜாகையில் தன் சம்சாரம் முழுவதையும் நிரந் தரம் செய்துவிட்டான். மனைவிக் கும் கடிதம்பறந்தாயிற்று. தன் மனைவி வருவதற்குள் புதிய க்ரகத்தை அப்படியே இந்திர லோகம் போல் செய்து விட வேண்டும் என்று தீர்மானித் து, அதன்படி பழைய குப்பை காகிதங்கள், பத்திரிகைகள் முதலியவற்றை பேப்பர்காரனி டம் போட எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அதே சம யம் தற்செயலாய் "பேப்பர்... பழைய பேப்பர்'' என்ற குரல் எழுந்தது. ஓடிச்சென்று அவ னை அழைத்தான்.

தராசில் அந்தப் பையன் காகிதத்தை எடை யிட்டுக் கொண்டிருந்தான். கோபுவின் கண்கள் அந்தப் பையன் ஏற்க னவே பல வீடுகளில் வாங்கி வந்திருந்த காகித மூட்டையின் பால் தாவியது. அதிலும் அவ னைக் கவர்ந்து அக்கோணியின் ஒரு மூலையில் ஏற்பட்டிருந்த கிழிசலின் வழியாக நீட்டிக் கொண்டிருந்த ஒரு டயரிதான். மெதுவாக அதையெடுத்துப் பிரித்தான். அவன் உடல் கிடு கிடுத்தது. அந்த டயரியின் முதல் பக்கத்திலிருந்த அதன் உரியவர் பெயர்தான் அவனை அப்படிச் செய்தது. உள்ளே நிறைய குறிப்புகள் தென்பட் டன.

'ஐயோ! இதுஇவனிடம் எப் படி வந்தது?' என்று அலறி யது அவன் மனம்.

"என்ன சார்! பார்க்கிறீங்க' டயரிங்க அது.''

"ஏதுடா உனக்கு இது! எங் கிருந்து எடுத்துவந்தாய்?''

"என்ன சார்! அப்படி கேக்கி றீங்க. நான் அப்படியெல்லாம் திருடமாட்டேங்க. எங்கே யிருந்தும் எடுக்கமாட்டேங்க. பெரிய தெருவிலே, கோடிவீடு, பச்சை கம்பி போட்ட வீட்டி லே ஒரு வேலைக்காரி போட் டாங்க, பணம் கொடுத்து வாங்கிவந்தேன். இப்படிக் கொடுங்க'' என்று அந்தப் பையன் அத்தனை விவரங்களை யும் கூறிவிட்டான். காரணம்! தன்னை எங்காவது திருடன் என்று சொல்லி விடுவார் களோ என்ற பயம்தான்'

"அப்படியா தம்பி! பணம் கொடுத்து வாங்கியதா? சரி. நான் உனக்கு ஒரு ரூபாய் தரு கிறேன். எனக்கு இதைக் கொடுக்கிறாயா?''

"நிஜமாங்களா? ஒரு ரூபாய்க் கா! ஜோராய் தரேனுங்க'' என்று குதித்தான் அச்சிறு வன். டயரியைக் கண்டபிறகு கோபுவிற்கு வியாபாரம் செய்வ தில் மனம் லயிக்க வில்லை. ஏதோ வந்த காசை வாங்கிக். கொண்டு உள்ளே வந்தான்.

அவன் மனம் படபடத்தது எண்ணம் சிறகடித்தது. அவன் கரங்கள் ஒவ்வொரு பக்கமாய் புரட்டத் தொடங்கி கண்கள் எழுத்தின்மீது நீந்த வாரம்பித்தன.

ஆண்டவனே! உன் கருணை யால் என் வாழ்வில் இதுவரை

யில் ஒரு குறையும் இல்லாது வாழ்கிறேன். என்றைக்கும் இப்படியே, உன் பக்தி குறையாமல் சுகபாக இருக்க செய். என் அன்பான கணவருக்கு ஈடு அவரேதான். வாஞ்சையோடு நோக்க எனக்கு இரு செல்வ மணிகளை அளித்திருக்கிருய். என்னிரு கண்மணிகளான கோபு, பாபு இருவரும் நவரத்தின மணிகள். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் அவர்களையும், அவர்கள் அறிவையும் வளர்த்து ஆளாக்கி எங்களுக்கு இன்பமளிப்பது உன் செயல். உனதருள கொழிக்கும் செல்வத்தோடு மணக்கும் வாழ்வளித்த கருணைக் கடலே! உன் அடியையே நம்பியிருக்கிறேன்.

* * *

என் கிளிக் களஞ்சியங்கள் இருவரும் எப்படி யிருக்கின்றனர். பார்த்தாலே பசி தீரும். துன்பம் பறந்தோடுமே. அழகிற்குமேல் அவர்களது ஒற்றுமையே அனைவரையும் கவர்ந்துவிடுமே. இதே ஒற்றுமையுடன் என்றென்றும் நீடூழி வாழவேண்டும். இது தான் என் ப்ரார்த்தனை. அவர்கள் அப்பாவிடம் கொஞ்சுவதைப் பார்க்கப் பார்க்க சலிக்க வில்லையே. என் பொக்கிஷங்களைப் பற்றி எழுதும்போதே அவர்களைக் கட்டியணைக்க என் கை தாவுகிறது.

* * *

என் மனது இரண்டு நாட்களாகவே தனையால் தவிக்கிறது. குழந்தைகளைக் கவனிக்கக்கூட எனக்குத் தோன்ற வில்லை. அவருக்கு ஏன் இப்படி திடீரென்று உடம்பு படுத்துகிறது. டாக்டர் குணமாகிவிடும் என்கிருர். இருந்தாலும் எனக்குப்பயமாக இருக்கிறது. அப்பாவுக்கு உடம்பு என்றதிலிருந்து கோபு, பாபு இருவர்முகத்திலும் ஈயாடவில்லை. படிக்கவும் ஓடாது தவிக்கின்றனர். பாசம்தான் காரணம். பகவானே! சீக்கிரம் அவர் பூரண குணமாகி எழுந்திருக்க அருள் செய்,

* * *

கோபு பாபு என் செல்வங்களே. நம்மைப் பிரிந்து ஓடிவிட்டார் உன் அப்பா. கடவுளின் சோதனைக்கு எல்லையில்லையா. இத்தனைநாளாக துக்கம் என்பது அறியாது சந்தோஷப் பறவையாகப் பறந்துகொண்டிருந்த என்னை சிறகொடித்துக் கூண்டிலடைத்து விட்டதே. நான் ஒன்று நினைக்க கடவுள் ஒன்று நினைத்து விட்டாரே. கனவிலும் நினையாத இடியைப் புரட்டிவிட்டாரே. என்னை இச் சுழலிலிருந்து எப்படி மீட்டு நிலைகொள்ளச் செய்வாரோ நானே அறியேன்.

* * *

நாமே அழுது புலம்பிக் கொண்டிருந்தால் குழந்தைகள் என்ன செய்யும். இனி நான்தானே தாய், தகப்பன் இரண்டும். அவர்களது முன்னேற்றமே இனி என் சுகம். கோபு புத்தி தெரிந்த பையனகிவிட்டான். காலேஜ் படிப்பிலும் தேர்ச்சி பெற்று வருகிருன். பாபுவும் வெகு சூடிகை. எனக்கு அதுவே போதும். குறைவற்ற செல்வமும் இருப்பதால் வாழ்க்கையில் எந்த குறையும் யின்றி குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

* * *

கோபுவிற்கு பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற கையோடு ஒரு

நல்ல வேலையும் கிடைத்துவிட்டது. அவன் அதிர்ஷ்டத்தோடு அவன் தகப்பனாரின் ஆசியும்தான்காரணம். சீக்கிரத்தில் அவனுக்கு ஒரு சிறந்த பெண்ணைப் பார்த்து கல்யாணத்தையும் செய்து வைத்துவிட்டால் என் கடமை பூர்த்தியாகிவிடும். பிறகு அவன் வீட்டுக்குத் தலைவனாகி கவனித்துக் கொள்வான். பிள்ளைகள் இருவரும் ஒற்றுமையாய் இருப்பதால் பாபுவைப் பற்றிக்கவலையில்லை. கோபுவிற்கு தன்தம்பியின்மீது உயிர். என்றும் அவன் கண் கலங்கக் காண மாட்டான். கோபுவின் மனைவியும் அரவணைப்போடு தாய்போல் பார்த்துக்கொள்வாள். அண்ணன் அண்ணியோடு சிரித்து மகிழ்வான் பாபு. உம்...என் மனக் கோட்டை உயர்ந்து கொண்டே போகிறது. அது உண்மையில் நடக்கவேண்டும்.

* * *

என் உடம்புக்கு வன்னவோ இரண்டு நாளாக கஷ்டமாக இருக்கிறது. காய்ச்சல் வேறு பலமாகக் காய்கிறது. பாவம்! எனக்கு சிச்ருஷை செய்கிறாள் சுப்புதான். நான் சிறிய வயதிலிருந்தே பார்க்கிறேன். ஒரு மாற்று அன்பு குறையாது நம் வீட்டோடு இருக்கிறாள். பெரிய படுக்கை போட்டு விடுவேன் போலிருக்கிறது. சுப்புதான் குழந்தைகளைக் கவனிக்கவேண்டும்.

* * *

இன்று என்னால் ஒன்றுமே முடியவில்லை. எனக்கு இவ்வுலகிலிருந்து விடுதலை கிடைத்து விடும்போலிருக்கிறது. சுப்புவைக் கூப்பிட்டு "சுப்பு நீ எங்கள் வீட்டில் நான் சிறியவளாயிருந்தது முதல் இருக்கிறாய். என் குழந்தைகளையும் பேணி வளர்க்கிறாய். இனி நீதான் அவர்களுக்கு. உன்னிடம் ஒப்படைக்கிறேன்'' என்று கூறினேன். அதற்கு அவள் "அப்படியெல்லாம் பேச வேண்டாம்மா. உங்களுக்கு இப்போது என்ன வந்துவிட்டது'' என்றாள். பயித்தியம் அவளுக்கு என்ன தெரியும். பாபுதான் சிறியவனாயிற்றே என்ற வருத்தம் ஒருபுறமிருந்தாலும், கோபு ஒருபோதும் பாபுவைக் கைவிடமாட்டான் என்கிற நம்பிக்கை எனக்குப் பூரணமா இருக்கிறது. நான் நிம்மதியாக... அப்பா...என்னால் பேனாவைப் பிடிக்க முடியவில்லையே...

* * *

அதற்குமேல் அந்த டயரியில் வேறொன்றும் இல்லை. தேதிவாரியாக எழுதியிராவிட்டாலும் உணர்ச்சி எழுந்த போதெல்லாம் கோபுவின் தாயார் தன் மனத்தில் உள்ளதை கொட்டியிருந்தாள். அதைப் படிக்கப் படிக்க அவன் எண்ணம் அலை பாயத் தொடங்கியது.

'அம்மா இப்படி ஒரு டயரி எழுதிக் கொண்டிருந்ததும் எனக்குத் தெரியாது. பிறகும் இதை நான் கவனிக்கவில்லை. பாபு கவனிக்காத சமயம் வேலைக்காரி தூக்கி போட்டு விட்டிருக்கிறாள். ஐயோ! உடன் பிறந்த பாசமற்ற, மனைவியின் பேச்சையே ப்ரதானமாக எண்ணும் என்மேல் அம்மா எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள். நான் பாவி! சண்டாளன்! பாபு எப்படித் தவிக்கிறானோ? சுப்புவும் ஊரிலில்லை. அந்தச்சமயம் பார்த்து இப்படி செய்தேனே. என்னை நம்பியல்லவோ அம்மா நிம்மதியாக

அமர உலகை அடைந்திருக்கிருள். செய்தேனெ தவறு. பாபூ!' என்று அலறினன். உணர்ச்சி வேகத்தில் வீட்டையும் பூட்ட மறந்து தன் பழைய வீட்டை நோக்கி "பாபூ...பாபூ!" என்று உள்ளம் கூவ ஓடினுன். போகும்போது முன்புற கூடத்தில் பெட்டி, படுக்கை, கூஜா இவைகள் அவனே வரவேற்றன.

'யார் ஊரிலிருந்து வந்திருக்கிருர்கள்? சுப்புதான் வந்துவிட்டாளோ' என்றெண்ணியவாறு அரையில் எட்டிப்பார்த்தான். அவனே ஆச்சரியம் கவ்வியது. "பாலா!" என்று மகிழ்ந்தது அவன் உள்ளம். "பாபு நடந்ததைப் பற்றி வருந்தாதேப்பா" என்ற மொழிகள் பாலாவின் அதரத்திலிருந்து பரிவுடன் த்வனித்தது. கோபுவின் வியப்பிற்கு எல்லேயே இல்லாது போய் விட்டது. நமக்கு அப்படி கடிதம் எழுதியவள் இப்படி பாபுவுடன் பேசிக்கொண்டு இங்கு வந்து அமர்ந்திருக்கிருள். விஷயம் அறிய ஆவல் துடித்தது,

"பாலா! பாபு" என்று உரக்க அழைத்தவாறு அவர்கள் எதிர்பாராத விதம் உள்ளே நுழைந்தான். இருவரும் திடுக்கிட்டு எழுந்தனர்.

"பாலா! நீ எப்போது வந்தாய்? முன்னறிவிப்பில்லாமலே வந்திருக்கிருயே! உனக்கு வந்திறங்க புதிய வீட்டு விலாசம் தானே எழுதியிருந்தேன். நீ கடிதத்தில் எழுதியிருந்ததைப் பார்த்தால் பாபுவின் முகத்திலேயே விழிக்க மாட்டாய் என்று எண்ணினேனே!"

பாலாகடகடவென்றுநகைத்தாள். "ஹூம்! முடிந்துவிட்டதா? மூச்சுவிடுங்கள்!" என்ருள். நான் பாபுவின் முகத்தில்தான் முதலில் விழிக்க வேணுமென்று வந்தேன். புதியவீடு எனக்கு வேண்டாம். நாம் மூவரும் இவ்வீட்டிலேயேதான் இருக்கவேண்டும்."

"பாபு! உன் மன்னிக்கு என்ன திடீர் மாறுதல். நீ என்ன சொக்குப் பொடி போட்டு அவளை மயக்கிவிட்டாய். உன் மீது அன்பைச் சொறிகிருளே'

"அவன் போட்ட சொக்குப் பொடி இதோ இருக்கிறது. என்னேயே கேளுங்கள்" என்று பாலா அவனிடம் கடிதத்தைநீட்டினுள்.

"அன்புள்ள மன்னிக்கு, உங்கள் செல்வன் பாபு எழுதிக்கொண்டது.

நீங்கள் அண்ணுவிற்கு எழுதிய கடிதத்தைத்தற்செயலாக நோக்கினேன். வருந்தினேன். என்மீது உங்களுக்கு வெறுப்பு ஏற்பட என்ன காரணமோ? நான் அறியேன். என் மனதறிய உங்கள் உள்ளம் நோகும்படி நான் எதுவும் செய்ததில்லே. என்னேயறியாது செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். நீங்கள் வேறு வீடு தேட வேண்டாம். அண்ணுவிற்கு எதற்கு அந்த ச்ரமம். நானே ஹோட்டலில் அரை எடுத்துக் கொண்டு போய்விடுகிறேன். நம் பெரியவர்களெல்லாம் வசித்துவந்த, ராசியான இந்த வீட்டுக்கே வந்துவிடுங்கள். தங்களுடன் வசிக்கக் கொடுத்து வைக்காத, தங்களை என்றும் மறவாத,

பாபு."

கடிதத்தை முடித்ததும் கோபு தன் மனைவியின் முகத்தை ஒரு விதமாகப் பார்த்தான். "நீ பாபு வீட்டை விட்டு போயிருப்பான் என்ற எண்ணத்தோடுதானே வந்தாய்?" என்ருன் கரகரத்த குரலில்.

"இல்லேயண்ணு! மன்னி என்னே வீட்டை விட்டுப் போவ

தைத் தடுத்து நிறுத்தவே துரிதமாக வந்திருக்கிறார்கள்.'' என்று மத்தியில் புகுந்தான் பாபு.

''என்ன தடுத்து நிறுத்தவா! என்ன மூடுமந்திரமாய் இருக்கிறதே விஷயம்''.

''விஷயத்தை விளக்கினால் தானே புரியும். நானே சொல்கிறேன் கேளுங்கள். மன்னி ஊருக்குபோகும் அன்று பிம் மாலை நடந்த சிறு தவறு மலையாய் மன்னியின் உள்ளத்தை அழித்துவிட்டது.நான் ஆபீஸ் வேலை அதிகம் இருந்ததால் அதிகாலை எழுந்து செய்ய உட்கார்ந்தேன். ஜோபியில் பார்த்தால் பேனா இல்லை. யோசித்ததில் ஆபீஸிலேயே வைத்தது நினைவுக்கு வந்தது. உங்களை எழுப்பி பேனாகேட்கலாமா வேண்டாமா? என்று சற்று குழம்பினேன். வேலை முடிக்க வேண்டி இருந்ததால் உங்களை, எழுப்பி பேனா கேட்க அறை கதவைத் தொட்டேன். என்றுமில்லாது அறைக் கதவு திறந்துகொண்டது.'ஒருவேளை மன்னி போட மறந்திருப்பாள்' என்று கட்டிலைப் பார்த்தேன். இருவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததால் 'வீணாய்எழுப்புவானேன். நாமே சென்று பேனா எடுத்துச் செல்லலாம்' என்று உள்ளே நுழைந்தேன். கட்டில் அருகில் இருந்த கோஸ் ஸ்டேண்டில் கை வைக்கும் சமயம் மன்னி முழித்துக்கொண்டு ஒருமுறைஎன்னை உற்று நோக்கினாள். ஆனால் உடனே நித்திரையில் ஆழ்ந்து விட்டாள். நான் பேனாவை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டேன். அதே நிமிஷம் என்மேல் தோன்றிய சந்தேக விதை விஷ வ்ருக்ஷமாய் மன்னியைத் தடுமாறச் செய்து விட்டது. நான் பேனாவை எடுத்து சென்றதையும் கவனித்த மன்னி 'பேனாவை எடுக்கத்தான் வந்தானா? அல்லது கெட்ட எண்ணத்தோடுதான் வந்தானா?' என்று குழம்பியவாறு இருந்த சமயம் என் கடிதம் மன்னியின் மனதிலிருந்த அழுக்கை அகற்றி துல்யமாய் செய்துவிட்டதோடு எண்ணத்தையும் மாற்றி விட்டது'' என்று பாபு சொல்லி முடித்தான். புன்னகையோடு கேட்டுக்கொண்டு இருந்த பாலா நிம்மதி பெருமூச்சோடு கணவனை நோக்கினாள்.

'அப்படியா! என்னை அம்மாவின் டயரி மாற்றியது போல் உன்னை தம்பியின் கடிதம் திருத்தியதா?''

''என்ன! அம்மாவின் டயரியா?'' என்று ஏகக்குரலில் இருவருங்கேட்டனர். கோபுவும் தம்பியைஒருபுறமும்,தாரத்தை மறுபுறமும் உட்காரவைத்துக் கொண்டான். மூவரும் சேர்ந்து டயரியை சுவைக்கத் தொடங்கினர்.

—*—

பையன்:- அப்பா! 20 கண் உடைய ராவணனை பற்றி படிக்கிறயே...நான் ஒண்ணு கேக்கறேன்பதில் சொல்லு...''ஆயிரம் கண்ணால் பார்ப்பான், அரை கண் மூடமாட்டான்'' என்ன சொல்லு.

தகப்பனார்:- சீ! கழுதை... உன் தலைபோ...

பையன்:- பூ! இவ்வளவு தானா அது ஜல்லடை தெரியுமா?

183222

# வந்து திறவாய் மகிழ்ந்து

ஸ்ரீ T. S. ராஜகோபாலன், B.A., L.T.

—★—

ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களுள் ராமாநுஜாசாரியர் தலைசிறந்தவர். அவர் ஸ்ரீரங்கத்திலே தங்கியிருந்து திருவரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்து, மண்ணுலகம் விண்ணுலகம் என்ற இரண்டு விபூதிகளுக்கும் (செல்வங்களுக்கும்) உடைமை பெற்று உடையவர் என்று எல்லோராலும் அழைக்கப் பெற்றார். உயிர்களிடத்துள்ளபேரன்பாலே எம்பெருமானார் என்ற நாமமும் பெற்றார். எப்போதும் பரமனது பெருங் குணங்களையும், இவற்றைப் பற்றி ஆழ்வார்களது ஈரச் சொற்களையும் நினைந்து நினைந்து உள்கரைந் துருகியிருப்பார். திருப்பாவை எனில் அவருக்கு ஊற்றம் அதிகம். ஒருக்கால் அடியார்கள் அவரைத் திருப்பாவைக்கு ஒருரு அர்த்தம் அருளவேண்டுமென்று கேட்க, அவரும், "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைத்தாலும் திருப்பாவைக்கு ஆள் கிடைக்காது. அதனை மோவாய் எழுந்த முரடர் கேட்கைக்கு அதிகாரிகள் அல்லர்; பெண்பாலர் கேட்கவேண்டும். அவர்களிலும், எம்பெருமானைத் தாம் அனுபவிக்கவேண்டும் என்ற பரிவுடையவர்களான பிராட்டிமாருக்கும் (ஸ்ரீதேவி, பூமாதேவி, நீளாதேவி முதலானோர்க்கும்) இது கேட்க நிலமல்ல. பல சொல்லி யென்? பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே (அவர்களது பரிவெல்லாம் ஒருங்கே திரண்டு வாய்ந்தவளான ஆண்டாளே) சொல்லித் தானே கேட்குமத்தனை" என்று விடையிறுத்தார். இவ்வாறு இப்பிரபந்தத்தின் சொல் நயத்திலும் பொருள் நயத்திலும் மண்டிய இவர் மாதூகரத்திற்காகத் திருவீதிகளிலே செல்லும் போது இப்பாசுரங்களை வாயால் சொல்லி மனத்தால் சுவையைப் பருகுவதுவழக்கம்; சில சமயங்களில் மெய்மறந்து தாம் செய்ததறியாமல் திகைப்பது முண்டு. திருப்பாவையில் இவருக்கு உள்ள ஆர்வத்தால் இவருக்குத் திருப்பாவை ஜீயர் என்ற திருநாமமும் உண்டு.

ஒருநாள் காலையில் ஏழெட்டு நாழிகைப்போதிருக்கும். உடையவர்மாதூகரத்திற்காகத்தெற்குச் சித்திரை வீதியில் வந்து கொண்டிருந்தார், திருப்பாவை அநுஸந்தித்துக் கொண்டு. அவரது மிடற்றோசையைக் கேட்ட மக்கள், வீடுகளிலிருந்து வெளிவந்து, அவரது திருவடிகளில் வணங்கி, வலம் வந்து, சிறிது பின்தொடர்ந்து, அவரது ஆசியையும் அருள் நோக்கையும் பெற்று உள்ளே சென்றனர். அவரது உயர்ந்த உருவையும், முழங்காலளவும் நீண்ட புயங்களையும், பொன் போன்ற மேனியையும், ஒளியுடைத் திருமுகத்தையும், காதளவும் நீண்ட திருக்கண்களையும், உத்தம புருஷ லக்ஷணங்கள் மற்றவைகளையுங் கண்டு வியந்து வெள்கிய கதிரவனும், தன்னொளி சுருங்கி வானவீதியில் தயங்கியது போல் காணப்பெற்றான். எம்

பெருமானார், "நாயகனாய்" என்ற பாசுரத்தை இரண்டாவது உரு சொல்லிக் கொண்டிருந்தார். அன்று அத்தெருவில் சிறு குழந்தைகள், தங்களது விளையாட்டில் ஸ்ரீரங்கநாதனது உத்ஸவத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எம்பெருமானார் எழுந்தருளுவதைக் கவனிக்கவேயில்லை. பெருமாள் புறப்பாட்டை அனுகரிக்கும் அவர்கள், காள வாத்தியத்தை முழக்குவது போல் ஒலித்தனர்; சிலர், "எச்சரிகை எச்சரிகை, எச்சரிகை" என்றனர். ஒருவன் "அருள்பாடு, எம்பெருமானார்!" என்றான். கோயிலில் நிகழ்வதை மனத்தில் கொண்டு. "வாயால் முன்னமுன்னம் மாற்றாதேயம்மா,நீ- நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்" என்று சொல்லிக் கொண்டு எழுந்தருளிய எம்பெருமானார், மெய்மறந்து, "அருள்பாடு" என்று கேட்டதும், கோயிலில் கதவு திறந்து தாம் பெருமாள் சேவிப்பதாக நினைத்துவீதியிலேயே விழுந்து வணங்கினார். பிள்ளைகள் யாவரும், "ஐயோ! அபசாரமாயிற்றே! மன்னிக்கவேண்டும்; நாங்கள் விளையாடுகிறோம்," என்று அவரை வலம்வந்து வணங்கிக் கலைந்தனர்.

பின்னுமொருநாள் இவர் திருப்பாவை அநுஸந்தானத்தோடே தமது ஆசாரியரான பெரிய நம்பிகளது திருமாளிகைக்கு எழுந்தருளினார். அப்போது "உந்துமத களிற்றன்" என்ற பாசுரத்தைச் சொல்லிக் கொண்டு, அதிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களை நினைந்தவண்ணமிருந்தார். நப்பின்னைப் பிராட்டி, கண்ணனோடே பந்தாடி, அவனைத் தோறகடித்து, அவனை ஒரு கையாலும் பந்தை ஒரு கையாலும் அணைத்துக்கொண்டு உறங்குவதும், ஆச்சியர் மாளிகையின் வாசலிலே நின்று கொண்டு, "பொழுது விடிந்தது; இதற்கடையாளம், மாதவிப் பந்தலிலுள்ள குயில்கள் பல்கால் கூவுகின்றன; எங்கும் கோழிகள் கூட்டங் கூட்டமாகக் கூவுகின்றன. நாங்கள் உள்ளே வந்து உனக்கும் அவனுக்குமுள்ள மைத்துனமையைப் பாடுமாறு, உடனே வந்து, கையிலணிந்துள்ள வளைகள் ஒலிக்குமாறு உன் செந்தாமரைக் கையால் கதவைத் திறப்பாய்" என்று ஆவலோடு நப்பின்னைப் பிராட்டியை வேண்டிக் கொண்டதும் அவரது உள்ளக் கடலில் அலைமேல் அலையெனக் கிளர்ந்தன. அப்போது அந்தத் திருமாளிகையின் கதவு தாளிடப் பெற்றிருந்தது. அவரது குரலைக் கேட்டு, பெரிய நம்பிகளது பெண், அத்துழாய் என்பாள்—பாத்திரத்தில் அமுதுபடியுடன் வந்து கதவைத் திறந்தாள். அவளது கைகளிலுள்ள வளைகள் ஒல்லென ஒலித்தன. "வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்" என்று சொல்லிக் கொண்டிருந்த உடையவர் கீழே விழுந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்.

அத்துழாய் "ஓ!" என்று கதறிக்கொண்டு உள்ளே ஓடினாள். காரணம் யாதென வினவினார், பெரிய நம்பி. அத்துழாய், "நாம் நம்பி மோசம் போனோம். உடையவர் இருக்காரே—திருப்பாவை சொல்லிக் கொண்டு வந்தார். நான் அமுதுபடி எடுத்துக்கொண்டு போனேன்; என்னைக் கண்ட

தும் கீழே விழுந்து கும்பிட்டார்—''.


இது கேட்டுப் பெரிய நம்பி, "பெண்ணே, இப்படி நீ நினைக்கக் கூடாது. அவரைப்பற்றி நான் நன்கு அறிவேன். எல்லா ஆசைகளையும் அடக்கி, யாவற்றையும் துறந்த மஹான் இவர். அவர் 'உந்து மத களிற்றன்' என்ற பாசுரத்தை அனுஸந்தித்துக் கொண்டிருப்பார். 'வந்து திறவாய்' என்று தானே சொன்னார்?'' என்றார்.

அத்துழாய், "வந்து திறவாய் என்ற அடி முழுதையுஞ் சொல்லிக்கொண்டு கீழே விழுந்துவிட்டார். அவரது நா தழதழத்தது—''.

"ஆம், அவர் சிறந்த பக்தர். 'வந்து திறவாய்' என்று சொல்லும்போது கதவு திறந்ததைக் கண்டு, நப்பின்னைப் பிராட்டியே கதவைத் திறந்ததாகக் கருதியிருப்பார். அவரைக் காண்போம், நீயும் வா'' என்றார் பெரிய நம்பி.

இவர்கள் இருவரும் வாயிலை அடையும் தருணம் எம்பெருமானார் தெளிந்து எழுந்து உட்கார்ந்திருந்தார். பெரிய நம்பி, "என்ன உந்து மத களிறோ?'' என்றார். உடையவரும், "பாசுரம் 'வந்து திறவாய் மகிழ்ந்து' என்றிருந்தது. ஆச்சியர்க்கு அன்று கதவு திறந்ததோ இல்லையோ, அறியேன்; நப்பின்னைப் பிராட்டியே எனக்கெனக் கதவைத் திறந்து காட்சி யளித்தாள். தேவரீருடைய அருளாலே இவ்வளவும் பெற்றேன்'' என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் திருப்பாவை அநுஸந்தானத்துடன் புறப்பட்டார்.

இது முதல் திருப்பாவை உருச் சொல்லும் போதெல்லாம், இப்பாசுரம் இரண்டுமுறை சொல்லப்பட்டு வருகின்றது.✽



—○✽○—

ஆஸ்திகன்:- என்ன சாஸ்த்ரிகளே! நேற்று கதைப்ரமாதமாம். கூட்டம் அதற்குமேல் அபாரமாம். வரும்படி......!

சாஸ்திரிகள்:- அடாடா... அதை ஏன் கேட்கிறீர்கள்! கதை ப்ரமாதம் தான் கூட்டம் அபாரம் தான்...ஆஸ்திகர்கள் அன்போ அதற்குமேல். வரும்படியோ ஒரே ஒரு நயாபைசா மயம் தான்...

ஆஸ்திகன்:- அடாடா... அதான்...?

—○✽○—



# கிழக்கு வெளுத்தது

வை.மு.கோ.
114-வது நாவல்

அடுத்த க்ஷணமே கார் தனது பும் பும் சங்கீதத்துடன் பறப்பதை லேசாக பாஸ்கரன் உணர்ந்த பிறகே அவனுக்கு சுயநிலை உண்டாகியது. அதற்குமேல் அகல்யா எதுவுமே பேசவோ, பாஸ்கரனைக் கண்குளிர பார்க்கவோ இல்லை. கடிவாளத்தை இழுத்துப்பிடித்து ஓட்டும் சாரதியைப்போல் ஸ்ட்ரீரங்கியைத் திருப்பி லாவகமாக ஓட்டும் சாரதிப் போலானாள்.

எந்தத் தெருவில் விபத்து நடந்ததோ அதே வீதியில் அடுத்த நிமிடமே வந்து பார்த்தாள். எத்தகைய சந்தடியுமில்லை. தைர்யலக்ஷ்மியின் கடாக்ஷமும் சமயசஞ்சீவியைப் போன்ற புத்தி கூர்மையும் ஏராளமாய் இருப்பதால் காரையொரு ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி அங்குள்ளப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று வீதியில் காவலுள்ள சேவகனிடம் விசாரித்தாள்.

“அதுவாம்மா கேட்கிறீங்க. அந்த ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்து வாத்தியாரில்லீங்க அவருடைய மூத்த மகனுக்கு திடீர்னு பயித்தியம் புடிச்சிடுதுங்களாம். ஏதோ வண்டியைத் தாறுமாறாக ஓட்டிச்சுங்க. எதிரேவந்த லாரி மோதி அஸாத்ய கலாட்டாவாகிப்பூட்டுதுங்க. அந்த பயித்தியத்தின் பெண்ஜாதியும், அம்மாவும் இந்த விஷயத்தைக் கேட்டுட்டு ஓடிவந்தாங்களாம். குதிரை எடக்குமுடக்கா பிச்சிகினு ஓடிச்சுங்க. அவங்கமேலே மெரிச்சுதுன்னு சொல்றாங்க. அடிபட்டுதுன்னு சொல்றாங்க. ஏதோ அமக்களமாயிடுச்சுங்க. போலீஸ்வந்து அல்லாரையும் ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோயிட்டாங்க...”

என்று அவன் முடிப்பதற்குள் அகல்யா அவ்விடத்தை விட்டு நகர்ந்து காரை நேரே போலீஸ்டேஷனுக்குச் செலுத்தினாள். வெகு கம்பீரமாக உள்ளே சென்று சப் இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைப் பூராவும் விசாரித்தறிந்து கொண்டாள். அவ்வூரிலிருக்கும் பெரிய உத்யோகஸ்தரின்

மகள் என்பது தெரிந்ததால் இன்ஸ்பெக்டர் மிகவும் மரியாதையாய் நடந்த சகலத்தையும் வணக்கமாகக் கூறினர்.

சேஷகிரிக்கு நல்லஅடி என்றும் அவனுக்கு ஏற்கனவே மூளைக்கோளாறு இருப்பதால் பயித்தியக்கார ஆஸ்பத்ரியில் சேர்த்துவிடக் கொண்டுபோய் விட்டதாயும் அவனுடைய தாயாருக்கு முகத்தில் பலமான அடி. அதுவும் கண்ணை பாதிக்கும்படியாக உண்டாகியிருப்பதால் உடனே ஆஸ்பத்ரியில் சேர்த்துவிட்டதாயும் அவன் மனைவியை வீட்டில் கொண்டுவிட்டுவிட்டதாயும் விஷயம் புரிந்தது. வந்தனம் கூறிவிட்டு காருக்குவந்த அகல்யா விஷயங்களை விடாமல் பாஸ்கரனுக்குக் கூறியதோடு, பாஸ்கர்! பயப்படவோ, அதைர்யத்தினல் மனத்தைத் தளரவிடவோ வேண்டாம். தைரியமாய் ஆஸ்பத்ரிக்குச் சென்று உங்களைப் பெற்ற தாய் பேயாயிருப்பினும் தாயேயாவர். ஆகையால் விவரமாக டாக்டரை விசாரித்துக்கொண்டு அம்மாவையும் பார்த்துவிட்டு வாருங்கள். நான் காம்பவுண்டு உள்ளேயே காரில் இருக்கிறேன். பிறகு வீட்டிற்குப் போய் மன்னியைப் பார்த்து, அவருடைய கருவிலுள்ள சிசுவை எப்படியாவது நாம் காப்பாற்றியே தீரவேண்டும், அதைக் கவனிப்போம். பெற்ற தாயிடம் ப்ரேமை ஜ்வாலை வீசவேண்டும். அதில்லை எனினும் அன்புக்குப் பஞ்சம் விளையக்கூடாது. உங்கள் மனக்கொதிப்பை அடக்கிக்கொண்டு அவர் என்ன பேசுகிறாரோ அதற்குத் தக்கபடி சமாதானமான பதிலைச் சொல்லிப் பேசிவிட்டு வந்து எனக்கு தகவல் கொடுங்கள். ம்....யோசிக்கவேண்டாம். போய்வாருங்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பாஸ்கரனின் இதய வானத்தில் ஒரு பளிச்சிட்ட மின்னல் வேகத்தில் ஆதியில் தான் படித்துள்ள ஒரு அற்புதமான பாடல் வரிவரியாய்த் தங்கத் தகட்டில் வைரம் பதிந்ததுபோல்,

அன்னைதயையும் அடியார்பணியும் மலர்
பொன்னியழகும் புவிப்பொறையும்—வன்னகலையும்
வேசிதுயிலும் விரன் மந்திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்கிறபாடல் மின்னி கண்சிமிட்டியது. அகல்யாவின் அரவிந்த வதனத்தை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து, மது உண்ட வண்டுபோல் பூரித்தான். மறுபேச்சின்றி தடதடவென்று நடையைக் கட்டினுன். அவன் கால்கள் நடந்தன. இதயத்தில் மேல் குறித்த பாடலின் இன்பப் பொருள் பதிந்து கிடக்கும் அழகில் மூழ்கிப்போய், இத்தகைய அருமையான பாடலை எந்தப் புண்ணியவான் எழுதி

னானே... என்று வியப்பு அலைகள் சுருண்டு சுருண்டு எழுந்து உணர்ச்சிக் கனலைத் தூண்டியது.

———

## 12

### சேற்றில் முளைத்த செந்தாமரை

தனிமையை வேண்டி வெளியே சென்று திரும்பி வந்த ஸேதுராமனுக்கு வீடே காலியாகக் கிடப்பதைக் கண்டு ஒன்றுமேபுரியாது ஸீதம்மாள் மூலம் சகலத்தையும் அறிந்துகொண்டு திடுக்கிட்டார். "என்ன...என்ன...நான் தேவதாசி மகனா! அகல்யா அனாமதேயப் பிண்டமா? யார் இப்படிச் சொன்னது? என் சரீரமே பற்றி எறிகிறது! ஸீதா... அகல்யா பாஸ்கரனுடனா சென்றாள். எந்த ஹோட்டலுக்கு என்று உனக்குத் தெரியுமா?" என்று படபடத்துக் கேட்டார்.

**ஸீதா:** நமக்குள்ள செல்வம், சந்தோஷம், வாழ்வின் வித்து முதலிய யாவும் நம் கண்மணி அகல்யா ஒரு பிம்பம் தான் என்பதை மறக்காதீர்கள். மனிதர்களுக்கு ஆத்திரம் வருவது சகஜம். தன்னை மீறக்கூடச் செய்து வேடிக்கை பார்க்கும் காலமும் விதிவசத்தால் நேர்ந்துவிடும். ஆனால் கூடுமானவரையில் மதியின்மையைக் கொண்டு சிலவற்றை தடுக்க முயலவேண்டும். பாஸ்கரனின் பேச்சையும், கதறலை நீங்கள் நேரில் அனுபவித்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் தெரியுமா? இதயத்தோடு இதயம் ஒன்றிப்போய் அவர்கள் தம்மையும் மீறி அன்புக் கனல் வீச பேசிய பேச்சும், செய்த சபதமும் நான் மறைந்துப் பார்த்துப் கேட்டும் பூரித்தேன், புலகிதமுற்றேன். அவர்களிஷ்டப்படியே நடக்கட்டும். இதைத் தடுத்தால் நம் வாழ்வுக்கே பங்கம் வந்துவிடும் என்று என்னிதயத்தில் ஏதோ ஒன்று சொல்லியதால், நான் அவர்களிஷ்டப்படி விட்டுவிட்டேன். கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது. அதீதமான அக்ரம முறையில் நம் கண்மணியும் இறங்கமாட்டாள். உத்தமன் பாஸ்கரனும் மனத்தாலும் நினைக்க மாட்டான். நீங்கள் பண பேராசைக்காரியின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து எதுவும் செய்துவிடாதீர்கள். பாஸ்கர் சேற்றுக்கொப்பான அந்த தாய் வயிற்றில் பிறக்ககூடிய மகனே இல்லை. "சேற்றில் முளைத்த செந்தாமரை" தான் நம் மருமகப்பிள்ளை. நான் உங்கள் காலைப் பிடித்துக்கொண்டு வேண்டுகிறேன். இதை நீங்கள்

கட்டாயம் கேட்டாக வேண்டும்" என்று வேண்டினாள். அதற்குமேல் ஸேதுராமனால் பதில் பேசமுடியவில்லை.

பெரிய மனிதர். மகத்தான உத்யோகம் வகிக்கும் அபாரமான திறமைவாய்ந்த அதிகாரியாய் பலரைத் தான் அடக்கியாளும் பொறுப்புவாய்ந்த உயர்ந்த மனிதராயினும் ஸீதம்மாள் குடும்ப விஷயத்தில் ஆர அமர யோசித்து ஆழமாகக் கூறும் வார்த்தைகளுக்கு மறுப்புச் சொல்லவோ, அந்தம்மாளை மீறிக்கொண்டு வெளியே சென்று பார்க்கவோ மனது இடந்தரவில்லை.

சில நிமிடங்கள் மவுனம் சாதித்தார். "மறுபடியும்... ஸீதா அவர்கள் பேச்சிலிருந்து என்ன புரிந்துகொண்டாய்? தவிர அந்தப் படுமோசக்காரி இன்னும் என்னென்ன சொன்னாள்?'' என்று கேட்டார்.

ஸீதா: இதோ பாருங்கள். என்மீது கோபிக்காமல் கேட்கவேண்டும். விளக்கைத் தூண்டினால் வெளிச்சம் அதிகமாகி உபயோகமாகும். குப்பைகளை எறிக்கும் நெருப்பைக் கிளறினால் சீக்கிரம் குப்பைகள் எறிந்து நன்மைகள் உண்டாகும். அடுப்பில் நல்ல பாயஸத்தை வைத்துவிட்டு அதைக் கவனிக்காமல் தீயை மட்டும் கிளறி எறியவைத்தால் பாயஸம் என்ன கதியாகும்! காந்தி கருகி குப்பையில் கொட்டுவதற்கும் ஒரு ஆளைத் தேடவேண்டிய கதிதான் வரும். அதுபோல் நம்முயிரினும் இனிய கண்மணி அகல்யாவாகிய பாயஸத்தை பாஸ்கரன் என்கிற பாத்திரத்தில் வைத்து அகிலாண்டம்மாள் குடும்பமாகிய அடுப்பில் ஏற்றிவிட்டோம். அதைக் கிளறினால் பாஸ்கரனாகிய பாத்திரம் பாயஸமாகிய அகல்யா இரண்டும் பாழாகத்தானே போய்விடும். நம்முடைய பொறுமையை இழக்காமல் சாந்தத் தண்ணீரை ஊற்றி அந்தத் தீயை தணிக்க நாம் பார்க்கவேண்டுமேயன்றி விஷ வ்ருக்ஷத்தை உண்டாக்கிவிடக் கூடாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் உங்கள் மனத்தை அலட்டிக் கொள்ளாமலிருங்கள். அவர்களுடைய இரண்டு மனங்களும் ஒருங்கே கலந்து ஒன்றிப்போய் பாலையும் நீரையும் எப்படி பிறிக்கமுடியாதோ அப்படிப் பிறிக்க முடியாத அளவு உறுதிப் பட்டுவிட்டதையே அவர்கள் பேச்சில் நன்றாக அறிந்தேன். போகப் போகப் பார்ப்போம்....பொறுமையை இழக்காதீர்கள். என்று வெகு சாந்தமாய் உபதேசம் செய்வதுபோலக் கூறினாள்.

நிரம்பவும் நிதான குணத்தை ஸ்வபாவீகமாகவே உடைய ஸேதுராமன் ஆர அமர யோசித்ததோடு ஸீதா சொல்லிய உபமானத்தை அவர் மனத்தில் பசுமரத்தாணி

போல பதிந்து வேலை செய்யத் துடங்கியது. தன்னுடைய சகலமான சந்தோஷ வாழ்க்கையும் அகல்யாவின் கையி லிருக்கிறது. அவளுக்கு ஏதாவதொரு தீங்கு—குறை நேர்ந்துவிட்டால்—அடிவேரில் பிடித்த பூச்சியின் அரிப் பால் நுனிக்கிளைகள் வாடி உலர்ந்து பட்டுப்போய் விடுவது போல் சகலமும் ஆய்விடும். ஆகையால் வெகு ப்ரயாசை யுடன் தன்னைத் தான் அடக்கிக்கொண்டு அகல்யாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

எல்லோருக்கும் சமமான பொழுது தான் என்றாலும் நோயாளிகளுக்கும்துக்கப்பட்டவர்களுக்கும்பரிகொடுத்துத் தவிப்பவர்களுக்கும் அதே பொழுது நீண்டு மலைபோல் வளர்வதாகத் தோன்றி வதைக்கின்றது. துக்கமே அறியா மல் ஆனந்தமாகக் காலத்தை கழிக்கும் சுகவாஸிகளுக்கும், இன்பக் காதலர்களுக்கும் பணம் சேர்க்கும் ஆசைப்பது மைகளுக்கும் அதே பொழுது ஒரு நொடியில் கழிந்துவிடுவ தாகத் தோன்றுகிறது. இது இயற்கையின் கூத்தில் ஒன் றல்லவா! அதேபோல் ஸேதுராமனுக்கு அகல்யாவைக் காணாத ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகம்போலத் தோன்றி வதைக்கிறது.

சந்திரசேகரனின் வீட்டிற்குப் போய் பார்க்கலாமா.... என்று ஒருபுறம் தோன்றுகிறது. அடுத்தக்ஷணமே அந்த அல்பர்களின் வீட்டில் கால் வைக்க மனது வராது வெறுப்பு தலைதூக்கியது. கூண்டிலடைபட்ட சிங்கம்போல் கைகளைப் பின்கட்டு கட்டிக்கொண்டு உலாவியவாறு வீதிப்பக்கத்தையே நோக்கிக்கொண்டிருந்தார்.பசி,தாகம், எல்லாம் பரந்துபோய்விட்டது. உத்தமமான உயர்ந்த சமுதாயத்தில் இத்தகைய பணப் பேராசைப் பிசாசுகளும் இருக்கிறதே?... இதனால் எத்தனை துன்பங்கள் உண்டா கிச் சிதறிப்போகின்றது என்ற வியப்பு அவர் நெஞ்சில் முற்றுகை இட்டது.


சிறிது நேரத்திற்குப்பின் டெலிபோன் மணியடித்த தும் வந்து ரிஸீவ் செய்தார் "யாரு...அகல்யாவா...என்ன சமாச்சாரம்? சீக்கிரம் சொல்லம்மா"...

**அகல்:** ஆமாம் அப்பா...அகல்யாதான். விஷயம் ஏதோ விபரீத பயங்கரத்தில் விழுந்திருக்கிறதப்பா...

**ஸேது:** என்ன பயங்கரம்! பாஸ்கரன் எங்கே?

**அகல்:** எனக்குத் தலை சுற்றுகிறது. பேசவே முடிய வில்லையே! (நடந்த சகலத்தையும் கூறி பின்) இப்படித் தவித்தவாறு ஆஸ்பத்ரியில்போய் அவர்மட்டும் பார்த்தார்.

குதிரையினால் அவருடைய தாயாருக்குப் பலமான அடிபட்டிருப்பதோடு கண்களுக்குப் பெருத்த அபாயம் உண்டாகி இருக்குமோ என்று டாக்டர்கள் பயந்து அபிப்ராயப்படுகிறார்களாம். அந்தம்மாள் ப்ரஞ்யையற்று அசையாமலிருப்பதற்காக மயக்கமருந்து கொடுத்துப் படுக்கவைத்திருக்கிறார்கள். என்ன விருப்பினும் பெற்ற தாயின் இந்நிலை



கண்டு கதிகலங்கிப்போய் அப்படியே உட்கார்ந்து விட்டாரப்பா! இது சமயம் நீங்கள் எந்த வர்மத்தையும் பாராட்டாமல் இங்கு வந்து அவரைச் சமாதானம் செய்தால் தேவலை,

அதனால்தான் கூப்பிடுகிறேன். இன்னொரு விஷயம்... அப்பா! அந்தம்மாளுக்கு பலமான அடி பட்டதால் அதிகமான ரத்தம் போய்விட்டது என்று புதிய ரத்தம் ஏற்றுவதற்கு டாக்டர்கள் தவித்தார்கள். நான் என் ரத்தத்தைக் கொடுத்தேன். எனக்கு ஏதோமாதிரி பலவீனமாயிருக்கிறது. அம்மாவை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்ரி, லக்ஷ்மி வார்டு 4-ம் நம்பர் ஸ்பெஷல் விடுதிக்கு வாருங்கள்....

அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. ஸேதுராமனுக்கும் தொண்டையை அடைக்கும் துக்கம் எங்கிருந்தோ வந்துவிட்டது. மெல்ல மென்று விழுங்கியவாறு, "அகல்யா! செல்வீ! பயப்படாதேம்மா! உனக்காக நான் என்னுயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். நம்மை அந்தத் திமிர்படைத்த மனுஷி அவமானப் படுத்தி மனதை நோகவைத்தபோதிலும் "இன்னா செய்தாளா அவர்நாண நன்னயம் செய்துவிடல்" என்று தெய்வப் புலமை வள்ளுவர் பாடியிருப்பதை நாம் நிலைநாட்டிக் காட்டிவிடுவோம். நீ எதற்கும் தளராதே கண்ணு", என்று கூறுவதைக்கேட்டு அகல்யா துக்கம் தாங்காது விசும்புவதை ரிஸீவர் மூலம் கேட்டு உணர்ந்த ஸேதுராமன் அன்புததும்ப அவளைத் தேற்றிவிட்டு அடுத்த க்ஷணமே ஸீதம்மாளுடன் ஆஸ்பத்ரிக்குத் தாவினார். பெற்ற பாசத்தையும் தெய்வீகமா யுதித்த ப்ரேமையையும் வென்று ஜெயிக்க யாராலாவது முடியுமா? வயதுவந்த பெரிய பெண்ணாயினும் புத்திர வாஞ்சையின் வேகத்துடன் அகல்யாவை அப்படியே தம்பதிகள் அணைத்துக்கொண்டு..."அகல்யா...பாஸ்கர் எங்கேம்மா? காணவில்லையே?" என்று அன்பொழுகக் கேட்டார்கள்.

"அப்பா...அம்மா...கேவலம் ஒரு அன்புக்காக—காதலுக்காக உங்களுடைய கண்ணியத்தையும், கவுரவத்தையும் குலைக்கிறேன் என்று எண்ணுகிறீர்களா"....

"சீச்சீ இதென்ன பேச்சம்மா...அன்பு என்பது சாமான்யமான விஷயமல்ல என்பது எங்களுக்குத் தெரியாதா? நாங்கள் என்ன கேவலம் முட்டாளா? உன் அன்புப்பயிரை உரமிட்டு வளர்க்கும் விவசாயியாக நாங்களிருக்கிறோம். இனி அப்படி நினைக்காதே...எங்கேம்மா பாஸ்கரன்?" என்று கூறியவாறு ஸேதுராமன் அங்குள்ள இடங்களில் சுற்றுமுற்றும் பார்த்தார். கண்களிலும் மற்ற இடங்களிலும் கட்டுகளுடன் ப்ரேதம்போல அகிலாண்டம்மாள்தான் படுத்துக்கிடந்தாள். நர்ஸ் ஒருத்தி கூர்ந்து கவனித்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறுயாரும் அங்கு இல்லை. அதைக்கண்டு வெறுண்ட அகல்யாவும் சுற்றுமுற்றும் தேடினாள்.

அங்குள்ள வராண்டாவின் பக்கம் உட்கார்ந்து பாஸ்கரன் ஏதோ எழுதுவதைக்கண்ட அகல்யா தந்தையை அங்கேயே இருக்கும்படிக் கூறிவிட்டுத் தான்மட்டும் சந்தடி செய்யாமல் பின்புறம்சென்று மூச்சுக்கூட விடாமல் பார்த்தாள். அவன் தன்னைமறந்து எழுதுவதைக் கவனித்ததும் தனக்குதான் முன்போல் கடிதம் எழுதுகிறான் என்று தீர்மானித்து வரிகளை ஓசைசெய்யாமல் படிக்கவாரம்பித்தாள்.

"அன்புள்ள அதிகாரி அவர்களுக்கு பாஸ்கரன் வணக்கத்துடன் எழுதுவது. தங்கள் உத்திரவு ப்ரகாரம்வந்து வேலையில் சேருவதாகத் தேதியும் குறிப்பிட்டு எழுதியகடிதம் சேர்ந்திருக்கலாம். ஆனல், அதன்படிநடக்க விதி என்னை விடவில்லை. என் வாழ்நாளே பயங்கர அந்தகாரத்தில் மூழ்கித் தவிக்கிறது. என் மனதே சரியில்லை. என் தாயார் ஆபத்தான நிலைமையில் படுத்திருக்கிருள். என் தமபனுக்குக் கடுமையான மூளைக்கோளாறு உண்டாகி என்னை சிதறவடித்துவிட்டதால் அந்த வேலைக்கு நான் லாயக்கில்லாத சங்கடமான நிலைமையில் இருக்கிறேன். ஆகையால்வேலைக்கு நான் வரவில்லை. என்னுடை...."

என்ற வரையில்தான் அவன் எழுதியதைப் படித்த அகல்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பின்னலிருந்தபடியே சடக்கென்று அக்கடிதத்தை எப்படியோ எடுத்துச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தபடியே..."பாஸ்கர்! இதென்ன அசட்டுச் செய்கை, இப்படியும் எழுத உங்கள் மனமும் கையும் துணிந்ததா? இதை நான் வெறுக்கிறேன். உங்களைப் போன்று பட்டம்பெற்றுப் பதக்கங்கள் பரிசு வாங்கியுள்ள வீரர்களுக்கு இது அழகல்ல. உங்கள் மூளை எத்தனை கொதித்துக் கலங்கியிருக்கிறது என்பதை உங்கள் கடித வாசகமே எடுத்துக் காட்டுகிறது. வேலை வேண்டாம் என்று ஒரே வரியில் எழுதுவதற்குப் பதில் வீட்டுக் குழப்பங்களை எல்லாமா எழுதுவது...பாஸ்கர்! அப்பா உங்களைப் பார்க்க வந்திருக்கிருர்...வாருங்கள் இத்தகைய மனோ தளர்ச்சிக்கு இனி இடம் கொடுக்காதீர்கள்" என்று கூப்பிட்டாள்.

ஆடாமல் அசையாமல் ஒரே ப்ரமை பிடித்துப் பதுமைபோல் உட்கார்ந்திருந்த பாஸ்கரன் அப்பா வந்திருக்கிருர் என்று கூறியதைக் கேட்டதும் துள்ளியவாறுத் திரும்பிப்பார்த்து, "என்ன...உங்கப்பாவா அகல்யா...ஐயோ! அந்தப் புண்ணியமூர்த்தியின் முகத்தில் நான் எப்படி விழிப்பேன், எனக்கு மிகவும் வெட்கமும், துக்கமும் பாதிக்கின்றதே....என்ன செய்வேன்" என்று தவித்தான்.

"ஒன்றும் பயப்படவோ, வித்யாஸமாக நினைக்கவோ வேண்டாம் பாஸ்கர். எங்கப்பாவின் தயாள குணமும், பொறுமையின் அதிசயமும் உங்களுக்குத் தெரியாது. நம் மிருவரையும் அப்பா ஒன்ருகவே திட்டமிட்டு மதிக்கின்ருர் என்பதைப் பெருமையுடன் நான் தெரிவிக்கின்றேன். வாருங்கள், இம்மாதிரி அசட்டுப் பிசட்டு என்று கடிதம் எழுத வேண்டாம்...இதோ பாருங்கள் பாஸ்கர். நீங்கள் தைரியமாய் இன்றே; இப்போதே வண்டி கிடைத்தால் பத் தான் கோட்டிற்கு ப்ரயாணமாகி பகவான் கருணையுடன் கொடுத்துள்ள வேலையை ஒப்புக்கொள்ளுங்கள். நாங்கள் இங்கு சகலத்தையும் பார்த்துக் கொள்கிருேம். நீங்கள் இங் கிருந்தால்தான் மனது சமாதானமின்றித் தவிக்கும். நிம்ம தியை நாடி இப்போதே கிளம்புங்கள். அப்பாவின் சினே கிதர் அங்கிருக்கிறார். அவர் வீட்டிலேயே முதலில் தங்கிப் பின் வேறு இடத்திற்குச் சவுகர்யமாய் போகலாம்"....

அகல்யா வருவாள், தன் கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டு இத்தகைய ஒரு புத்திமதிகளும் சிறந்த யோசனை களும் கூறுவாள் என்று பாஸ்கரன் கனவுகூட காண வில்லையாதலால் இந்த வார்த்தைகளும், செய்கையும் பாஸ் கரனை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. எத்தனைதான் படித்த மேதாவியாயிருந்தாலும் அதிர்ச்சியான விஷயங்களைத் தாங்குவதற்குண்டான தைரியம் சிலருக்கு உடனே வருவ தில்லை. பாஸ்கரனும் அந்த வகுப்பைச் சேர்ந்துவிட்டான். உட்கார்ந்துள்ள இடத்தைவிட்டு எழுந்திருக்கவும் தோன்ற வில்லை. முகத்தில் ஒரே பீதியும், வெறுப்பும், ஏக்கமும் படர்ந்து காக்ஷியளித்தது.

மகா கெட்டிக்காரியான அகல்யா ஜாடையால் தன் பிதாவைக் கூப்பிட்டு ஜாடையாலேயே தன் மனதிலுள்ள தைக் கூறிவிட்டாள். ஸேதுராமன் மிக்க சாந்தமாக வந்து, "மிஸ்டர் பாஸ்கர்! நான் இப்போதுதான் பெரிய சர்ஜனிட மும் இன்னும் சில டாக்டரிடம் உங்கம்மாவைப்பற்றி விசாரித்தேன். பயப்படவே வேண்டாம். உயிருக்கு அபாய மிருக்காது என்று சொன்னர். நீங்கள் இங்கு ஏன் தனி யாக இருக்கவேண்டும். உள்புறம் வாருங்கள்" என்று கை யைப் பிடித்து இழுத்தார்.

'இத்தகைய கண்ணியம் வாய்ந்த பெரியமனிதரிடம் தாயார் எத்தனை கேவலமாக நடந்துகொண்டு விட்டாள். பண விஷயத்துடன் நின்றிருந்தாலும் தேவலை. இவர்களை நேருக்குநேர் தாக்கிக் கன்னபின்னவென்று பேசி மனத் தைப்புண்ணக்கிவிட்டஅக்ரமத்தைக்கூடமறந்து எவ்வளவு பொருமையுடன், அன்புக்குஅறிய ப்ரதானத்தைக்கொடுத்

துப் பேசுகிருர்...என்ன ஆச்சரிய மனிதர்களோ இவர்கள் தெரியவில்லையே...என் தாயார் செய்தக் கொடுமை என்னுலேயே சகிக்க முடியவில்லை என்ருல் இவர்களால் எப்படி பொருக்கமுடியும் என்று நான் நினைத்ததற்குத் தலைகீழாக விஷயம் நடந்துவிட்டதே...இப்போது நான் என்ன பேசுவேன். எப்படி அவர் முகத்தைப்பார்ப்பேன்'என்றுதனக்குள் பலபல விதமாக எண்ணியவாறு தலைகுனிந்தபடியே அவர் அன்புக் கரத்தில் ஐக்கியமாகி நடந்தான்.

பாஸ்கரனின் அகத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சிகளை அவனுடைய முகபாவத்தில் தெரிந்துகொண்ட அகல்யா பாஸ்கரனுக்காகத் தானும் மனம் வருந்திக் கலங்குகிருள் எனினும், தன் மனஉறுதியும் தளர்ந்துவிட்டதோ என்று பாஸ்கரன் எங்கே எண்ணிவிடப் போகிருனே என்றுதன்னைமிகப்ரயாஸைப்பட்டுச் சமாளித்துக்கொண்டு ...“பாஸ்கர்! இதோ பாருங்கள், உம். இப்படி தலைநிமிர்ந்து பாருங்கள்'', என்று அழைத்து அன்புத்தேன் அரவிந்த விழிகளில் சொட்ட அகலவிரித்த விழிகளால் நோக்கினுள்.

சாதாரண பெருங்காற்றடித்தால் மனிதர்கள் சமாளிக்க முடியும். ப்ரம்மாண்டமான சூராவளியுடன் கலந்த ஊழிக்காற்று போன்ற பயங்கரப் புயலடிக்கும்போது பெரிய பெரிய கட்டிடங்களே தகர்ந்து பொடி சூரணமாகி விடும்போது சிறிய குடிசைக்குக் கேட்கவேண்டுமா? அந்த நிலையைத்தான் பாஸ்கரன் அடைந்திருந்தான். தன்னுடைய நிலை இத்தகைய படுமோசமானச் சுழலில் சிக்கிவிடும் என்று அவன் கனவுகூட காணவில்லையாகையால் இந்த அதிர்ச்சி அவனுக்குத் தாளாது வதைத்துவிட்டது. அகல்யாவின் அபரிமிதமான அன்பு தெரியாமல் போகவில்லை. அவள் தனக்காக எத்தகைய த்யாகமும் செய்யத் தயாராயிருக்கின்றதையும் அவனுள்ளம் வெகுநன்ருக அறிந்து கொண்டு பூரிக்கின்றது. எனினும் தன்னுல் அவர்களுக்கு எத்தகையத் துன்பம் நேர்ந்துவிட்டது என்கிற அதிர்ச்சியே அவனைப் பெருங் குழப்பத்திற்கு ஆளாக்கிவிட்டது. ஏதோ எந்திரப் பாவைபோல நடந்து சென்ருன்.

ஸேதுராமன் பாஸ்கரனின் சோர்வையும் சோகத்தையுங் கண்டு எவ்விதம் தேற்றுவது என்றே புரியாமல் அவரும் சற்றுக் குழம்பியபின் ஓரிடத்தில் உட்காரச்செய்து சிறிது ஆஸ்வாஸப்படுத்தி பின்...“மிஸ்டர் பாஸ்கர்! நான் இப்படிக் கேட்கிறேனென்று என்மீதுகோபிக்கக்கூடாது. கோணலாகி முருக்கிக்கொண்டுள்ள நாய் வாலை நிமிர்த்த யாராலும் முடியாது. அதுபோல் உங்கள்தாயாரின் அசட்டு எண்ணமும் எதிர்பார்ப்பும் ஒன்றுகூடி நம்முடைய வாழ்

வையே பாழாக்கிச் சிதறவடித்துவிடும் நிலைமைக்கு வந்து விட்டது. இனி இதை நிவர்த்திசெய்யும் மார்க்கம் ஒன்றே ஒன்றுதானிருக்கிறது. நான் அப்போது வெறும் பத்தாயிரம் ரூபாயிக்கல்லவா செக்கு கொடுத்தேன். இப்போது 15 ஆயிரத்திற்கு செக்கு அல்லது எங்காவது சென்று மாற்றிப் பணமாகவே கொண்டு உங்கள் தாயாரின் கையில்"... என்று முடிப்பதற்குள் பாஸ்கரனுக்கு அத்தனை வேதனையிலும் அபாரமான கோபம் வந்துவிட்டது. கண்களில் குபீரென்று ஆத்திரத்தீ பறக்க சடக்கென்று தலை நிமிர்ந்துப் பார்த்தான்...ஸார்! மன்னிக்கவேண்டும். இந்த வார்த்தை மட்டும் இனி எடுக்கவேவேண்டாம். தயவுசெய்து மன்னித்துவிடுங்கள். என் தாயாருக்கு லஞ்சத்தைக் கொடுத்து இன்பத்தை விலை கொடுத்துவாங்கி அனுபவிக்க நாங்கள் தயாராக இல்லை. தான் பெற்ற மக்களின் சுகத்தையும் க்ஷேமத்தையும் கோருகிறவள் பெற்ற தாயாராகும். அத்தகைய தாயாரே இத்தகைய நிலைமைக்குவந்து பணப் பேராசையை முன்னிட்டு என்னுடைய சகல நன்மைகளுக்கும் மேலாக என்னை விற்றுப் பணம் சம்பாதித்துத் தான் வாழ நினைக்கிறபோது என்னுடைய கொள்கையை மட்டும் நான் விட்டுக் கொடுப்பேனு. வேண்டாம் காலணு வரதக்ஷிணை வாங்காமல் நான் விவாகம் செய்து இன்புரவேண்டும் என்பது என்னுடைய சங்கல்பம். அதை மீறிநான் எதுவும் செய்யமாட்டேன். என் விதி என்னை எவ்வாறு ஆட்டுகிறதோ ஆட்டட்டும். இந்த விஷயத்திற்கு நான் சம்மதிக்கமாட்டேன். பிள்ளையினுடைய சந்தோஷ வாழ்க்கையை விட பணந்தான் அதிகம், வரதக்ஷிணை வாங்கும் பணந்தான் ப்ரதானம் என்று எண்ணும்போது அந்த எண்ணத்திற்கு நான் கட்டுப்படவே மாட்டேன்......"

என்று ஏதோ மேடைப்ரசங்கம் செய்வதுபோல் செய்வதைக் கேட்டு ஸேதுராமன் திடுக்கிட்டுப்போனுர். தான் என்ன பதில் சொல்வதென்றே தெரியாது திகைத்தார். அவர் மூளையும் குழம்பியது. மகா கெட்டிக்காரியாகிய அகல்யா தன் தகப்பனுருக்குக் கண்ஜாடை காட்டி 'அவர் மனத்தை அலட்டவேண்டாம். சற்று ஓய்வுகொண்டு சமாதானமாகட்டும். பார்க்கலாம்' என்று கூறி அமர்த்தினுள்.

அதேசமயம் சந்திரசேகரன் அங்கு அலையக்குலைய ஓடிவந்தார். இந்த விஷயங்களெல்லாம் அவருக்கு அப்போதுதான் நன்ருக விளங்கியதால் ஆஸ்பத்திரியிலுள்ள அகிலாண்டத்தைப் பார்க்க ஓடிவந்தார். பாஸ்கரன் ஒரே துக்கஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் பரிதாபத்தைக் கண்டு மனங்கொதித்து மகனை இருகத்தழுவிக்கொண்டு "செல்வா!

பாஸ்கரா! அந்தக் கள்ளி, கபடி, ப்ரம்மராக்ஷஸி இன்னும் சாகாமல் உயிருடனா இருக்கிறாள்? அவளுக்கு ஒரு முடிவை பகவான் காட்டி நம் குடும்பத்தின் கண்ணியத்தை சீக்கிரத்தில் சரியாக்கமாட்டாரா? என்னிதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே. எங்கே அந்தப் படுபாவி'' என்று கத்தியவாறு கண்ணீரைப் பெருக்கினார்.

இதைக் கேட்ட பாஸ்கரனுக்கு வியப்பாகவேதான் தோன்றியது. அப்பாவின் மனதைக்கூட நோகச்செய்திருப்பதனால்தானே இதயம் புண்ணாகிப் பேசுகிறார். இப்படியும் ஒரு மனுஷி இருப்பாளா என்று தன் தாயின்மீதே எரிந்து வெறுத்துக்கொண்டான். "அப்பா! உங்கள் மனக்கொதிப்பை நானறிகிறேன். நீங்கள் வார்த்தைகளை அதிகம் விடவேண்டாம். எல்லாம் நான் செய்தபாபம். உலகத்தில் வரம்பு மீறிய சில பழக்கங்களை ஜனங்கள் கண் மூடித்தனமாகச் செய்துவிட்டதன் பலன் இது. இந்தக் கொடுமையை வேரோடு களைந்து எறிந்து அந்த வழக்கத்திற்கு சாவுமணி யடித்துப் புதைத்துவிட்டால் பிறகு இத்தகைய அசம்பாவிதங்கள் நேராது. ப்ராணனுக்கு மன்றாடியவாறு படுத்திருக்கையில் நாமும் மனுஷ்யதனத்தை இழந்து பேசிமனத்தை நோகச் செய்யவேண்டாம். அப்பா ...நான் நாளை உதயம் புறப்பட்டு ஊருக்குப் போகிறேன். உயிருக்கு அபாயம் எதுவும் இருக்காது என்கிறார் டாக்டர். ஆகையால் தைரியமாக இருங்கள். என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். நான்......''

என்று முடிப்பதற்குள் சாதுவான அந்த மனிதர் துயரம் தாங்காது பாஸ்கரனை மீண்டும் சேர்த்துக் கட்டிக்கொண்டு "பாஸ்கரா! என்னுடைய சங்கடமான நிலைமை உனக்குத் தெரியவில்லையா! இந்தப் பாவி பிழைத்தாலென்ன செத்தால் என்ன. ஒரு வழியாக முடிந்துவிடும் என்று தான் நான் நம்பினேன். இவள் பிழைத்து இன்னும் யார் யார் குடிக்கு உலைவைப்பாளோ. அதுதான் நம் தலைவிதியின் கையிலிருக்கிறது. சேஷகிரியோ பைத்யக்கார ஆஸ்பத்ரியிலிருக்கிறான். பாவம் பரதேசிப் பெண் பூமாவின் நிலையைப் பார்த்தால் அவள் இனி உயிருடன் வாழவே மாட்டாள், தற்கொலைதான் புரிந்துகொள்வாள் போல் அத்தனை பரிதாபகரமாயிருக்கிறாள். என் கதிதான் நடைச்சவமாயிருக்கிறது. இந்நிலையில் நீயும் என்னைவிட்டு விட்டுப் போய்விட்டால்...''பாவம் புலம்பி விம்மினார்.

"அப்பா! நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம் பகவான் இருக்கிறார். நம் குடும்பத்தின் அலங்கோலத்தைக் கண்டு இனியுமா அவருக்கு மனமிறங்காது. இனியுமா கை

விட்டு விடுவார். அவரை நம்பி இருங்கள். அப்பா உங்களுக்கோர் அதி ஆச்சர்யமான ஆனந்தமான விஷயத்தைச் சொல்லப் போகிறேன். இதை இப்போதே ஏன் சொல்லுகிறேன் என்றால் உலகம் நாளை ஏதாவது தூற்றுமோ என்பதற்காக இப்போதே சொல்லுகிறேன். கடவுள் உங்களுக்கு தாத்தா என்கிற அறிய பட்டத்தைச் சூட்டக் கருணை புரிந்திருக்கிறார்...மன்னி கர்பவதியாகி இரண்டு மாதங்களாகிறதாம். டாக்டர் ரகஸ்யமாகச் சொல்லி அந்தம்மாளை வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லியதால்தான் அகல்யா அந்த இரு உயிர்களையும் சரிவர பாதுகாக்கும் பொருட்டு ஜாக்ரதையாய்த் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அம்மாவின் மூளைகெட்டதனத்தினால் இப்போது நேர்ந்துவிட்ட நிலைமையில் அவளுடைய கர்ப்பத்திற்கு ஏதும் சிதைவு வராமல் கடவுள் காக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறேன்..." என்று சொல்லி முடிப்பதற்குள் ஹா....பாஸ்கரா....நிஜமாகவா பாஸ்கரா... ஐயோ பாவம் அந்த அனாதைப் பரதேசிக்கும் பகவான் ஒரு விடிவு காலத்தைக் கொடுத்தாரா....என்னிதயபாதாளத்தில் அழுந்திக் கிடக்கும் ஒரு பெரிய பாரம்....மர்மம் இனி விலகுமா! கடவுளே" என்று தன்னை மறந்து கைக்குவித்துக் கடவுளை வேண்டினார்.

இதையே ஒரு சாக்காக வைத்துக்கொண்ட பாஸ்கரன்....மெல்ல சற்று தூரமான தனி இடத்திற்கு அழைத்துச் சென்று..."அப்பா! இன்று காலையில்கூட அம்மா அண்ணாவிடம் உங்களுடைய ரகஸியம் தன் கையிலிருக்கிறது. அவர் வாலாட்டினால் அதை அம்பலப்படுத்தி விடுவேன் என்று மிரட்டினாரே அது என்னப்பா?" என்று கேட்டான். இதைக் கேட்ட சந்திரசேகரன் ஜாடையினால் பிறகு சொல்கிறேன். நான் முதலில் வீட்டிற்குப் போய் பூமாவைப் பார்க்கவேண்டும். தனிமையில் விட்டு விட்டு வந்தேன் என்று பதிலுக்கும் எதிர்பார்க்காமல் ஓட்டமாக ஓடினார். இத்தனை பெரிய அதிர்ச்சியான விஷயங்கள் நெஞ்சை அழுத்தியபோதிலும் பூமாவின் புதிய விஷயத்தைக் கேட்டு அவருக்குப் புத்துணர்ச்சி உண்டாகிப் புதிய தெம்பைக் கொடுத்தது.

# 13

## இருண்ட வாழ்வில் தீப ஜோதி!

சந்திரசேகரன் ஆஸ்பத்ரியில் நுழையும்போது பார்த்துவிட்ட அகல்யாவுக்கு பூமாவின் நினைவு குபீரென்று வந்ததும் ஐயோ! அவள் எப்படி யானளோ! என்கிற பயம் உண்டாகியது. உடனே தன் பிதாவிடம் ஜாடைகாட்டி விஷயத்தைச் சொல்லிவிட்டு தன் தாயாரை அழைத்துக்கொண்டு வேகமாக பூமாவின் வீட்டிற்கு வந்து கதவை தட தடவென்று இடித்தாள்.

பூமா ஆஸ்பத்ரியிலேயே விஷத்தைக் குடிக்கத் துணிந்தவள் இப்போது எப்படி இருக்கிருளோ! என்கிற திகில் சந்திரசேகரனைப் பார்த்த பிறகுதான் அகல்யாவைப் பூர்ணமாகக் கப்பிக் கொண்டது. அதனுல்தான் ஓடோடி வந்தாள். கதவை இடித்தும் திறக்காததால் அகல்யாவுக்கு மிக்க பயமும் அதிர்ச்சியும் உண்டாகி விட்டதால் கதவின் இடுக்கினல் எட்டிப் பார்த்தாள்.

பூமா தள்ளாடித் தடுமாறி நிர்க்கவும் மாட்டாத நிலைமையில் கூடத்தில் நின்று கையில் ஒரு தாம்புக் கயிற்றை வைத்து அதைப்பார்த்துப் புலம்புவதையும் கதவு இடிக்கும் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு நடுங்கிப்போய் பெதருவதையுங் கண்ட அகல்யா சமயோசித புத்தியை உபயோகித்து.... ஸார். போலீஸ்....போலீஸ்....கதவு திறவுங்கள்.......டேய் 404...திறக்கவில்லை என்ருல் ஏறிகுதித்துக் கதவைத் திற என்று தன் குரலை மாற்றிக்கொண்டு ஆண்பிள்ளை பேசுவதுபோல் உறக்கக் கூவினள்.

அவ்வளவுதான் போலீஸ் என்று காதில் பட்டதும் பூமாவின் கையிலிருந்த கயிறு தானக நழுவிக் கீழே விழுந்ததோடு அவளையும் வீழ்த்திவிட்டது. இதைக்கண்ட அகல்யாவுக்கு முன்னிலும் அதிகரித்த திகில் பிடித்துக் கொண்டதால் எப்படி உள்ளே போவது என்று க்ஷண நேரம் யோசித்தாள். நேரமோ இருட்டு ராக்காலம். தன்னை யார் பார்க்கப்போகிருர்கள் என்கிற துணிச்சலுடன் வீதிப்பக்கம் வந்து சுற்றுமுற்றும் பார்த்தாள்.

ஓட்டுவீடாகையால் வீதியில் நாலாபுரமும் ஒருமுறை பார்த்துவிட்டு வெகு தைரியமாய் திண்ணைமீது ஏறி அதன் வாரப்பட்டையைப் பிடித்துத் தொத்திக்கொண்டு தாயின் உதவியால் எப்படியோ ஓட்டுமீது ஏறி உள்ளே முற்றத்தில் குதித்துக் கதவை திறந்து தன் தாயாரை அழைத்துக் கொண்டு மீண்டும் கதவைத் தாளிட்டுப் பின் பூமாவைத்

தூக்கித் தன் மடியில் கடத்திக்கொண்டு குளிர்ந்த ஜலத்தைத் தெளித்து வீசினுள். நாடியைப் பார்த்தாள். பூமா.... பூமா.... இதோ எங்களைப் பாரம்மா. செல்வீ! என்று ஸீதம்மாள் பரிவுடன் கூப்பிட்டு பூமாவின் தலைமயிரை வருடி நெத்தியைத் தடவிக் கொடுத்தாள்.

அன்பு ஸ்பரிசத்தை ஆயுளில் இதுவரையில் அறியாது ஏங்கும் பரதேசிப் பெண்ணுன பூமாவுக்கு அகல்யாவின் அளப்பரிய அன்பினுல் அன்று மாலையும் இப்போதும் நூதன உணர்ச்சி உண்டாகியதும் மெல்லக் கண் விழித்தாள். அவள் கண்களை அவளே நம்பாமல் நாற்புறமும் சுற்றிப்பார்த்துச் சில விநுடிகளுக்குள் தன்னை அணைத்திருக்கும் மென்மையான மலர்க்கரங்கள் அகல்யாவுடையது என்பதை உணர்ந்ததும் சிறு குழந்தையைப் போல் அவளால் கட்டுப்படுத்த முடியாது அகல்யா.... அகல்யா....என்று கூறியவாறு அவள் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு குலுங்கக் குலுங்கப் புலம்பிவிட்டாள்.

அகல்யா அவள் இதயத்தில் அடிக்கும் சூருவளி சிறிது ஓயட்டும் என்கிற எண்ணத்துடன் சில விநுடிகள் நன்ருக கதரவிட்டுப் பின் தேறுதல் வார்த்தைகள் கூறியபடி.... "அம்மணீ! நான் ஆஸ்பத்ரியிலேயே உங்களுக்கு எச்சரித்தது நினைவிருக்கலாம். அதை அறவே மறந்துபோய் இங்கு இன்னும் விபரீதமாய்த் தூக்குப் போட்டுக்கொள்ள துணிந்தது என்ன அநியாயம். இந்தச் செய்கைக் கடவுளுக்குத்தான் அடுக்குமா....இதோடு இச்செய்கையின் பயங்கரம் விட்டுவிடுமென்று பார்த்தீர்களா. ஒருபோதும் விடாது. உங்களை யாரோ இம்ஸித்துத் தூக்கிலிட்டுக் கொலை செய்ததாக அந்தப்பழி நிரபராதியான எங்கள் பேரிலும் விழலாம். உங்கள் மாசிலாத மைத்துனரின் பேரிலும் விழலாம். உங்கள் செய்கைக்காக நாங்களும் தூக்கு தண்டனை அடையவோ அல்லது ஆயுள் பரியந்தம் கம்பி எண்ணவோ நேருமல்லவா....இனி இம்மாதிரி அசட்டுக் காரியம் அநியாயக் காரியம் செய்யாதீர்கள். இப்போது நான் ஒரு அதி அத்புதமான ஆச்சரியமான விஷயத்தை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதைக் கேட்டபிறகாவது நீங்கள் உங்களையும்—உங்கள் விலையிலாத மாணிக்கம் போன்ற மகனையும் காப்பாற்றி உங்கள் குடும்ப கவுரவத்தை சீர் தூக்கி வைத்துக் குல விளக்கை அணையாத நந்தா விளக்காக ஏற்றி நாரணனைத் தொழுது நன்மையை உண்டாகும்படிச் செய்யுங்கள். அம்மணீ! நீங்கள் இப்போது தனி மனுஷியல்ல. தெரியுமா' உங்கள் வயிற்றில் பகவான் கருணையால் ஒரு சிசுவை வளர வைத்திருக்கிருர். அந்த ரகஸ்யத்தை அறிந்துதான்

நாங்கள் உங்களையும் உங்கள் கருவிலுள்ள மாணிக்கத்தையும் நல்ல போஷணையுடன் ரக்ஷிக்க எங்கள் வீட்டிற்குக் கொண்டுபோனோம். விஷயத்தை உங்களிடம் சமயம் பார்த்துச் சொல்ல எண்ணினோம். ஆனால் நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைத்துவிட்டார். அம்மணீ! நீங்கள் புனிதமான தாய்ப் பீடத்தில் ஆநந்தமாக அமரப் போகிறீர்கள்......"

என்று சொல்லி முடிப்பதற்குள்....என்ன! என்ன! நானா....அன்னை யாகப்போகிறேனா. நான் கர்ப்பவதியா! அகல்யா....அகல்யா.......மாமி...நிஜமாகவா....நான் கர்ப்பவதியாகவா இருக்கிறேன்....அல்லது என் மனம் தற்சமயம் களிக்கும்பொருட்டு இப்படிச் சொல்லி வைக்கிறீர்களா!.... நிஜமாகச் சொல்லுங்கள்" என்று பதைக்கப் பதைக்கக் கேட்டாள்.

'தான் கர்ப்பவதி என்றால் எத்தனைப் பெருமிதம் தனக்கோர் குழந்தை பிறக்கப்போகிறது என்றால் ஒரு பெண்ணுக்கு எத்தனை ஆர்வம். நிகரற்ற ஆனந்தந்தான் எத்தனை உச்சத்தில் நிர்த்தனமாடுகிறது. தனது இருண்ட வாழ்வுக்கோர் தீபஜோதியான மகவுப்பேறு கிடைக்கப் போகிற தென்றால் எத்தனை இன்பம்....ஆஹா. இந்த விஷயத்தில் இத்தனை ஆனந்தமிருக்கிறதா...'என்ற ஒரு எண்ணம் கிருகிரென்று அகல்யாவின் இதயத்தில் மின்னல்போல் தோன்றி ஒரு பெருமூச்செறியச் செய்தது. அந்தப் பெருமூச்சில்தான் எத்தனைவித உணர்ச்சிகளும், மின்னல்போன்ற எண்ண ஜ்வாலைகளும் எழும்பி மறைந்தன என்பதை அவளைப் பெற்ற தாயான ஸீதம்மாள் ஒரு நொடியிலறிந்து அவள் ஒரு பெருமூச்சு விட்டாள்.

"அம்மணீ! நாங்கள் உங்களை ஏமாற்றும் பொருட்டுப் பொய் சொல்வதாக நினைக்க வேண்டாம். கடவுள்மீது ஆணையாக சொல்கிறேன். நீங்கள் இன்னும் 7 மாதத்தில் ஒரு அழகான குழந்தைக்குத் தாயாகப் போகிறீர்கள் என்றும் அந்தச் சிசு நன்றாக உயிருடன் பிறந்து வாழ வேண்டுமானால் உங்களை வெகு ஜாக்ரதையாகப் பாதுகாத்து ரக்ஷிக்க வேண்டும். பலவித போஷணைகளைக் கொடுத்து புஷ்ட்டியாக்கவேண்டும் என்று டாக்டர் என்னிடம் அந்தரங்கமாகச் சொல்லி உங்களை என்னிடம் ஒப்படைத்தார். அதனால்தான் நான் உங்களை விஷம் குடிக்க எத்தனித்தபோதுகூட நீங்கள் இன்னொரு உயிரைக்கூட சேர்த்துக் கொலை செய்யப் பார்க்கிறீர்கள் என்று கேட்டேன். அதை மறந்திருக்க மாட்டீர்களென்று

நம்புகிறேன். அம்மணீ! நீங்கள் எத்தகைய துக்கங்களை, நரக வேதனைகளை அனுபவித்துக் கொடிய இருளில் தவித்த போதிலும் உங்களை அந்த பயங்கர அந்தகாரத்தி லிருந்து விடுதலை செய்ய ரவிகுமார் உதயமாகி குடும்பத் திற்கே துன்பம் நீங்கிக் கிழக்கு வெளுத்து இன்பம் உண்டாகப்போகிறது என்று என் மனத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது. ஆகையால் வீணை கவலை எதுவும் கொள்ளவேண்டாம். வீட்டைப்பற்றியே நீங்கள் நினைக்க வேண்டாம். கடவுள் கிருபையில் உங்கள் கணவருக்கு நன்ருகக் குணமாகிவிடும். பயப்படவேண்டாம். கிடைத் தற்கரிய செல்வம் கிடைத்திருக்கையில் அதைச் சிதர வடித்துவிடாதீர்கள். இதை உங்களிடம் சொல்லி மறுபடி யும் உங்களை நான் அழைத்துப்போகவே வந்திருக்கிறேன் தெரியுமா? நீங்கள் என்னேடு வீட்டிற்கு வாருங்கள். என் னிடம் இருக்க உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் நர்ஸிங் ஹோமிலேயே இருந்து உங்களை நன்ருகக் கவ னிக்கும்படி நானே ஏற்பாடு செய்கிறேன்...''

என்று அன்பைப் பிழிந்து சாரு ஊட்டுவதுபோல் இவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டே சந்திரசேகரன் கதவிடித்தார். ஸீதம்மாள் திறந்ததும் உள்ளே வந்து இங்குள்ள நிலைமையைக் கண்டும், அகல்யா சொல்லிய இன் னமுதச் சொல்லைக் கேட்டும் உள்ளம் பூரித்த சந்திரசேக ரன் பேசத்தெரியாமல் நா தழுதழுக்க, "அம்மா! நீங்கள் சாமான்ய இப்பூமியிலுள்ள பெண்களல்ல. இந்தச் சண் டாள உலகத்தில் ஆதர்சப் பெண்மணிகளாய் அவதாரம் ஏடுத்திருக்கிறீர்கள். பூமா!...பூமா...செல்வீ! நான் தாத்தா வாகப் பேகிறேனும். நீ தாயாகப் போகிருயாம்! பாஸ்கரன் சொன்னுன். எல்லாம் இந்த உத்தமிகளால்தான் நமக்கு நன்மை உண்டாகவேண்டும் அகல்யா! நீ சொல்லிய வார்த்தையை நான் கேட்டுக்கொண்டே வந்தேன். உன் னிஷ்டப்படி நீ பூமாவையும், அவள் குழந்தையையும் காப் பாற்றி இந்தக் குடும்பத்திற்குப் புத்துயிரளிக்க வேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்பதுபோல் கேட்டார்.

பூமா: மாமா! எனக்கொன்றுமே பேசத் தெரிய வில்லை. அகல்யாவை நீங்கள் மனுஷியாக நினைக்கிறீர்கள். நானே பெண் தெய்வமாய், உபகார தேவதையாக, அப் பழுக்கற்ற அன்னையாய் நினைத்திருக்கிறேன். மாமி எப்படி இருக்கிருர்கள். மாமிக்கு இந்த விஷயம் தெரியுமா? அகல்யா! மாமிக்குச் சொன்னுயா?

அக. அம்மணீ! இந்தக் கவலை எல்லாம் நீங்கள் படவே வேண்டாம். இப்போது அவருக்குத் தெரியக்கூடாது.

அதனால் சொல்லவில்லை. சரி...நேரமாகிறது....நாங்கள் போகவேண்டும். நீங்கள் எங்களுடன் வாருங்கள். இவர்களை அனுப்பித்தருளுகிறீர்களா? என்று சந்திரசேகரனை பார்த்துக் கேட்டாள்.

சந்திர. குழந்தாய்! உன் முகத்தில் விழிக்கவும் நான் அருகதையற்றவன் என்பதை என் மனச்சாட்சியே சொல்கிறது. மகா பாவி உங்களை ஏதேதோ தாருமாருகப் பேசிவிட்டதை யறிந்து மனந் துடிக்கிறது. உங்கள் இருவரையும் நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிசாசை ஒரு மனுஷியாகவே மதிக்கவேண்டாம். அவள் சொல்லிய எல்லா ஆபாஸ-அபத்த-குப்பைகளை என் பொருட்டாகவும், பாஸ்கரனுக்காகவும் நீங்கள் மறந்து, மன்னித்து விடவேண்டும்" என்று கூறியபடியே அகல்யாவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கண்களில் ஒற்றிக் கண்ணீரால் நீராட்டி வைத்தார்.

இந்தச் செய்கை அகல்யாவின் இதயத்தைத் தொட்டு அன்பும் பக்தியும் தலைதூக்கி மெய்க்கூச்செரியச் செய்தது. "மாமா! இதென்ன காரியம்? நானோ சிறுமி. உங்கள் பெண்மாதிரி. என்னிடமா மன்னிப்புக் கோருவது. பகவானல்லவா மன்னிக்கும் சர்வ சக்தன். அவனை விட்டு, என்னிடமா கேட்பது. நானென்ன அத்தகைய காரியம் செய்துவிட்டேன். மாமா! முதலில் பூமாவை நன்ருகக் கவனிக்காவிட்டால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடும். அதைப்பாருங்கள். நான் அழைத்துப் போகலாமா? மாமி ஒன்றும் சொல்லமாட்டார்களே?"

சந்திர: மாமியாம்....மாமி! மரியாதையைப் பாரு. படுபாவி! சாண்டாளி! மூதேவி! என்ருல் பொருந்தும். அவளிடம் இந்த அதிசய விஷயத்தையே சொல்லப்போவதில்லை. நீங்களும் சொல்லவேண்டாம். ஏன்....என் மனத்தில் இன்னெரு வித தீர்மானங்கூட தைரியமாக ஊர்ஜிதமாக உதித்துவிட்டது. அந்த நாசகாலி அப்படியே கிடக்கட்டும். அவள் விதிப்படி பகவான் கொடுக்கிற தண்டனையை அடைந்து அனுபவித்துச் சாகட்டும். நாம் முதலில் பார்த்து வைத்த முகூர்த்தத்தில் உங்கள் விவாகத்தை நடத்தியே தீருவது என்று முடிவு செய்துவிட்டேன்.....

"மாமா!....நிறுத்துங்கள்! கேவலம் சிறுமி நான் உங்களுக்கு எதிர்த்துப் பேசுவதாக நினைக்கக்கூடாது. அம்மாதிரி திருட்டுத்தனமாகவும், பெத்ததாயின் மனவிரோதமாயும், த்வேஷத்திற்கு அஸ்திவாரம் கோலுவது போன்று காரியத்தைச் செய்ய நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். உங்கள் குமாரர்கூட சம்மதிக்க மாட்டார்

என்பது என் நம்பிக்கை. என் பிதா மேல்நாடுகளுக்குச் சென்று வந்திருப்பதாலும், நான் ஏதோ தற்கால நாகரீகமாய்ப் படித்தும் உடையணிந்தும் மற்றபடி இதர மார்க்கங்களில் பழகுவதும் கண்டு நீங்கள் என்னைத் தாய்நாட்டுப் பற்றற்ற தரிதலைப் பெண் என்றும், உலகமே கண்டு வியக்கும் பாரதநாட்டின் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ள உத்தம லக்ஷ்யங்களையும், பழக்க வழக்கம், கற்பு, ஒருக்கம், முதலியவைகளையும் நான் அடியோடு மறந்துவிட்டதாகத் தாங்கள் நினைத்துப் பேசுவதாக என் தளிர்மனத்திற்குத் தோன்றிப் புண்படச் செய்கிறது. மாமா! என்னை அம்மாதிரி நினைத்திருந்தால் கட்டாயம் அதை மாற்றிக்கொள்ளும்படி மிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். நான் நாகரீகமாய் இருப்பதாகக் காண்பது சிறிது உண்மையே. ஆனாலும் நான் அதற்கு அடிமையல்ல. அந்த மோகத்தில் நான் மூழ்கி பழமையின் சிறப்பைக் கட்டோடு மறந்தவளல்ல. பழமையில் ஒரு சிறிது புதுமையைப்புகுத்தி மெருகிட்டு நான் வாழ்கிறேன். என்னுள்ளம் பாரதநாட்டின் சிறப்புக்கும் பெருமைக்கும் அடிமையானது என்பதை சத்யமாக நம்புங்கள் மாமா! நம் புண்ணிய நாட்டின் புனிதக்கவிகள் ஆயிரமாயிரமாய்த் தோன்றி, அரிய கவி மலர்களை வாடாமலர்களாய் வாரி வழங்கிப் புதையல்போல் வைத்திருக்கும் அழகை மட்டும் நான் ரஸிப்பவளல்ல. அதன் சக்தியை உணர்ந்து கடுகளவாவது நடத்திக்காட்டத் துடிதுடிக்கும் உள்ளத்தைப் பகவான் எனக்குக் கொடுத்திருக்கிறார் மாமா! ஒரு மகா மேதை நிறைந்த கவி...

அன்னை தயையும் அடியார் பணியு மலர்
பொன்னியழகும் புவிப்பொறையும்—வன்ன கலையும்
வேசிதுயிலும் விரன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்று பெண்மணிக்கும், ஆடவர்க்கு,

சொல்லின் வன்மையும் சோர்விலா உழைப்பும்
நல்லரைப்பணியும் நாணய ஒழுக்கமும்
இல்லறப்பண்பும் இறைவனின் பக்தியும்
சொல்லை யகற்றித் தூயவனுக்கிடுமே.


என்றும் ஒப்புயர்வற்ற பாடலைப்படித்திருக்கிறேன் மாமா! அப்பாடல் ஏட்டுச் சுரைக்காயாகப் போய்விடாமல் கவியின் உள்ளத்தில் பூத்த கவிமலர் நாட்டின் மக்களுக்கு நல் பயனளித்தது என்பதைஅவர்களுடைய ஆத்மா உணர்ந்து ஆனந்திக்கும் வண்ணம் நடத்திக் காட்டவே ஆசைப்படுகிறேன் மாமா! நம் கவியரசர் பாரதியார் காணி நிலம் வேண்டும் என்கிற பாடலில்.

பாட்டுக் கலந்திட்டவே—அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும்;—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்;—அந்தக்
காட்டு வெளியினிலே,—அம்மா, நின்றன்
காவலுற வேணும்;—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

எந்தன் பாட்டுத் திறந்தாலே இவ்வையகம் பாலித்திட வேண்டும் என்று பாடியபோது அந்தக் கவியின் உள்ளத்தில் எத்தனை பெரிய ஆசை கடல்பொங்கி எழுந்து எதிர்காலத்தின் எண்ணங்களை அலையலையாய்ச் சுழற்றி அடித்திருக்கவேண்டும் என்பதை கைம்மேல் கண்ணாடிபோல் இன்று நாம் பார்க்கவில்லையா? ஆயிரக்கணக்கான தலைவர்கள் அதிதீரமா உழைத்த போதிலும், லக்ஷக்கணகான ஆண்களும் பெண்களும் தேச சேவை செய்து தொண்டர்களாய்உழைத்துச் சிலர் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்திருப்பினும், அவைகளுக்கும் மேலான சக்தி வாய்ந்த கவியின் பாடலுடைய வன்மையும், உணர்ச்சியும் தான் மக்களின் இதயங்களில் நீருபூத்த நெருப்புப்போலிருந்த சுதந்திரக் கனலை ஊதி ஜோதியை உண்டாக்கிப் புத்துணர்ச்சி பெறச்செய்து. அடிமரத்தளையை அறுத்தெறிந்து ஐக்ய ஜோதியில் ஒன்றுகலந்து, யாகத்தீயில் குளிக்கச் செய்து கவிகண்ட கனவை நினைவாக்கிச் சுதந்திரத்தேவியைத் தரிசித்துக் கவிபாடிய 'ஆடுவோமே.... பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோ'மென்று பாடிக் குதிக்கிறோம். வெள்ளையரை விறட்டி வெளியோற்றினோம். உலகமே கொண்டாடும் படியான —வியக்கத்தக்க — நிலையை அடைந்தோம். இதற்குத் துணை புரிந்தது கவியின் வாக்குத்தான் என்பது என்னுடைய துணிவான நம்பிக்கை.

இது தேசத்திற்கு மட்டுமான காரியமாகும். மக்களின் இன்றியமையாத புனித வாழ்க்கைக்கு எத்தனை அஸ்திவாரக் கவிகள் உலகத்தில் மலர்போன்று உதிர்ந்துகிடக்கின்றன. அவைகளைக் கூடுமானவரையில் ஆசரணையில் கொண்டு வாழ்க்கையில் பயன்படுத்தி நடைமுறையில் நடத்திக் காட்ட வேண்டுமென்றுதான் நான் சங்கல்பம் செய்திருக்கிறேன். மாமா! கேவலமான ஒரு போகத்திற்கு இந்த வைர நெஞ்சத்தில் இடங்கிடையாது. மனித இதயம் வைரம்போன்றதாக ஜ்வலிக்க வேண்டுமேயன்றி சரீரத்தில் வைரம் ஜ்வலிப்பது ஒரு பெருமையல்ல" என்று மூச்சு திணற ஆவேசத்துடன் பேசினாள்.

183222
சென்னை 600 008



## இந்தியாவில் வாழ்க்கை முறையும், இயற்கைக் காட்சிகளும்.

### பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்.

பெண்கள் தலையிலே மண் குடங்களை லாகவமாகத் தாங்கிக் கொண்டு குடி தண்ணீர் கொண்டு வருவதற்காகக் கிணற்றை நோக்கிச் செல்லும் காட்சி கிராமப் புறங்களில் மிகவும் சகஜமான காட்சியாகும்.

சுத்தமான பாதுகாப்பான குடி தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டம். கிராம மக்களுக்குத் தேவையான பாதுகாப்புள்ள நல்ல குடி தண்ணீரை சப்ளை செய்வது தேசிய சுகாதாரப் பிரச்னையாகும்; அதைத் தீர்த்து வைப்பதற்கு மத்திய, ராஜ்ய சர்க்கார்கள் முயன்று வருகிறார்கள்.

சுய உதவி முயற்சிகளில் மக்களுக்குள்ள உற்சாகத்தாலும், சமுதாய அபிவிருத்தித் திட்ட, ஸ்தல அதிகாரிகளின் உதவியாலும் முதலாவது, இரண்டாவது திட்ட காலத்தில் திருந்திய ரகக் குடி தண்ணீர்க் கிணறுகள் ஏராளமாகக் கட்டப்பட்டன. அதனால் லட்சக்கணக்கான மக்களுக்கு சுத்த தண்ணீர் கிடைத்து வருகிறது. இப்போது ஒரு குடம் தண்ணீருக்காக மைல் கணக்காக நடக்க வேண்டியதில்லை. அசுத்தமான தண்ணீரைக் குடித்து தாகத்தைத் தணிக்க வேண்டிய அவசியமில்லை.

இப்படத்தில் பீஹாரைச் சேர்ந்த பெண்கள் சமுதாயக் கிணறொன்றிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வருவதைக் காணலாம்.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்புதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய மூரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா 12
பஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிகளல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை. மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
ரூ. 1-8
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

---

## சுத்தானந்த பாரதி

சாந்தி கீர்த்தனம் 3-8

---

## ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமடைர 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.